Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

(C/604)
Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 06 ஞாயிற்றுக்கிழமை (20.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 171

## விமானப்படையின் முக்கிய இலக்கு பிரபாகரன்; யுத்தகாலத்தை மீட்டுப்பார்க்கிறார் முன்னாள் தளபதி



(கொழும்பு)

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது பிரபாகரனை இலக்கு வைத்து 12 ஜெட் விமானங்களைக் கொண்ட விமானப்படை அணியொன்று ஒரே சமயத்தில் பல இடங்களில் குண்டுத்தாக்குதலை நடத்தியிருந்தது என்று முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்சல் றொசான் குணதிலக தெரிவித்துள்ளார்.

வன்னியில் ஒருமுறை ஐந்து மிக் 27 ரக விமானங்களும், நான்கு கிபிர் விமானங்களும், மூன்று எவ் 7 ரக விமானங்களுமாக மொத்தம் 12 ஜெட் விமானங்களைக் கொண்ட ஸ்குவாட்ரன், பிரபாகரனை இலக்கு வைத்து இரண்டு இடங்களில் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தின.

ஏழு ஜெட் விமானங்கள் ஜெயந்தி நகரிலும், ஏனைய ஐந்து விமானங்கள் புதுக்குடியிருப்பிலும் தாக்குதல் நடத்தின.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் முக்கிய தளபதிகளை மீட்க கடற்புலிகள் முயற்சிக்கலாம் என்பதால், அதைத் தடுப்பதற்காக சீனன்குடாவில் இரண்டு மிக் 27 ரக விமானங்கள் மூன்று கிழமைகளாக நிறுத்தப்பட்டிருந்தன. இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய செவ்வியின் போது விமானப்படையின் முன்னாள் தளபதியும், படைத்துறை அதிகாரிகளின் பிரதானியுமான எயர் சீவ் மார்சல் றொசான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இச் செவ்வியின் முக்கிய பகுதிகளை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

புலிகளின் வான் தாக்குதல்களை முறியடிக்க நாம் தயாராக இருந்தமைக்கு, 2 விமானங்கள் தரையில் நிறுத்தப்பட்டிருப்பதை கண்டுபிடித்த ஆளில்லா வேவு (12 ஆம் பக்கம் பார்க்க)

# எமது கடல் வளங்களை முழுமையாக அனுபவிக்கும் நிரந்தர சூழல் உருவாகும்

### அதுவரை பொறுமை காக்கக் கோருகிறார் அமைச்சர் டக்ளஸ்



(கொழும்பு)

**இந்திய கடற்தொழிலாளர்கள் எமது கடல் வளங்களை அழித்தல், எமது கடற்தொழிலாளர்களது தொழில் உபகரணங்களை அழித்தல் மற்றும் அவர்களது வாழ்வாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துதல் போன்ற காரணங்களால் வட பகுதி கடற்தொழிலாளர்கள் முகம் கொடுத்து வரும் பாரிய பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் முயற்சிகள் வெற்றியடைந்து வருவதாகவும் இது குறித்து பேச்சு வார்த்தைகள் சகல தரப்பினருடனும் முன்னெடுக்கப்பட்டு** **(11 ஆம் பக்கம் பார்க்க)**

## உள்ளூராட்சி மன்றங்கள் அடுத்த மாதம் முதலாவது அமர்வு

(கொழும்பு)

வாக்குப் பதிவுகள் இடம் பெற்ற உள்ளூராட்சி சபைகள் அனைத்திலும் முதலாவது சபை அமர்வுகள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் இடம்பெறும் என மாகாண மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி தேர்தல்கள் இடம் பெற்ற 234 உள்ளூராட்சி சபைகளிலும் முதலாவது சபை அமர்வுகள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் அனைத்து உள்ளூராட்சி சபைகளினதும் நிர்வாக காலத்தை அரசாங்கம் ஒரு வருடத்தினால் நீடித்தது. (11 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இறுதி யுத்தம் அபகீர்த்தியை அகற்ற முயற்சி

### சர்வதேச மன்னிப்புச் சபைக்கு அழைப்பு

(கொழும்பு)

நாட்டின் நற்பெயருக்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியை அகற்றும் முயற்சியில் அரச தரப்பு இறங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

இதன் முதற்கட்டமாக சர்வதேச மன்னிப்புச் சபை அதிகாரிகளை நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னால் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சாட்சியமளிக்க முன்வருமாறு அரச தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பாக அரசாங்கம் கொண்டுள்ள கரிசனைகள் குறித்து கலந்துரையாட வருமாறு அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி ஜேம்ஸ் மக்டொனால்ட்டுக்கு அழைப்பு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். இவ்வழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேசிய நல்லிணக்கம், மீள்கட்டுமானம், காயங்களைக் குணப்படுத்தல் போன்ற (11 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆயுட்காலம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆயுட்காலம் மேலும் நீடிக்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

சிங்கள மக்கள் மத்தியிலிருந்தும் மேற்படி ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்யவிருப்பதாலும் ஏற்கனவே பெறப்பட்ட சாட்சியங்கள் தொடர்பாக மீளாய்வுப்பணிகளைச் செய்வதற்காகவும் மேற்படி ஆணைக்குழுவுக்கு மேலதிக கால அவகாசம் தேவையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழு, தமது இறுதி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு மேலும் சிறிது கால அவகாசம் தேவைப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்மன் விக்ரமசிங்ஹ இந்த தகவலை தெரிவித்தார். ஆணைக்குழுவினால் பெறப்பட்ட சாட்சியங்களை மீளாய்வு செய்வதற்கு அதிக காலம் தேவைப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு இன்று (11 ஆம் பக்கம் பார்க்க)



## லிபியா மீது வான் தாக்குதல்கள் ஆரம்பம்; களமிறங்கியது பிரெஞ்சு விமானப்படை

### திணறுகிறது கடாபி ஆதரவுப் படைகள்


(திரிப்போலி)

லிபிய வான்பரப்பில் பறந்து இராணுவ வாகனமொன்றின்மீது பிரெஞ்சு போர் விமானமொன்று நேற்று சனிக்கிழமை தாக்குதல் நடத்தியதாக பிரெஞ்சு பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தியரி புர்கார்ட் தெரிவித்தார்.

ஜி.எம்.ரி.நேரப்படி 16.45 மணிக்கு (இலங்கை நேரப்படி நேற்று இரவு 10 மணி) இத்தாக்குதல் இடம்பெற்றதாக அவர் கூறினார். லிபியாவில் ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானத்திற்கிணங்க விமானப் பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்தும் சர்வதேச (11 ஆம் பக்கம் பார்க்க)

# தனிமனித தவறுகளை எமது கட்சியோடு சம்பந்தப்படுத்துவது அபத்தமான செயலாகும்

## யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் அறிக்கை



(யாழ்ப்பாணம்)

தனிநபர்கள் புரியும் தவறுகளையோ அன்றி குற்றச் செயல்களையோ எமது கட்சியோடு சம்பந்தப்படுத்துவது என்பது எம்து கட்சி மீது அவதூறுகளைப் பொழியும் திட்டமிடப்பட்ட அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டுமன்றி, இச்செயலானது ஒரு அநாகரீக செயலுமாகும்.

அண்மையில் யாழ்.பத்திரிகை நிறுவனம் ஒன்றினுள் நுழைந்து அப்பத்திரிகைக்கு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவித்து தமிழ் பொலிஸார் ஒருவர் கைது செய்யப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. அதில் கைது செய்யப்பட்டிருக்கும் தமிழ் பொலிஸாரை எமது கட்சியோடு சம்பந்தப்படுத்தி செய்தி வெளியிட்டிருப்பது திட்டமிடப்பட்டு பொய்யாகப் புனையப்பட்ட ஒன்றாகும்.

நாம் மக்கள் மத்தியில் நிரந்தரமாகவே தங்கியிருந்து எமது மக்களுக்கான பணிகளைத் தொடர்ந்தும் ஆற்றி வருபவர்கள். இதில் மக்கள் வேறு நாம் வேறு என அன்றி நாம் மக்கள் மத்தியில் இரண்டறக்கலந்து வாழ்ந்து வருபவர்கள். எமது கட்சியின் பணிமனை நோக்கி வந்து செல்பவர்கள் எம்மிடம் வேலை வாய்ப்புக்கள் மற்றும் உதவிகளைப் பெறுபவர்கள் எமது ஆதரவாளர்கள், உறவினர்கள், நண்பர்கள் என எம்மைச் சுற்றி மக்கள் தொடர்புகள் தினமும் அதிகரித்துச் செல்கிறது. அதற்காக எம்மோடு தொடரபுகள், உறவுகளைக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் எமது கட்சியின் அங்கத்தவர்கள் என்று அர்த்தமல்ல.

இந்நிலையில் மேற்படி பத்திரிகை நிறுவனத்திற்கு அச்சுறுத்தல் விடுத்ததாகத் தெரிவிகப்படும் பொலிஸ உத்தியோகத்தர் எமது கட்சியின் உறுப்பினர் எனத்தெரிவிக் கப்படுவதை நாம் மறுக்கின்றோம். அது மட்டுமன்றி நடந்த சம்பவம் குறித்து கற்பனையில் சோடிக்கப்பட்ட செய்திகளை பரப்புவதன் மூலம் எமது கட்சி மீது அவதூறு பரப்பும் திட்டமிட்ட செயல்களையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இதே வேளை அச்சுறுத் தல் விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கும் சம்பவம் உண்மையாயின் அந்நபர் மீது சம்பந்தப்பட்டவர்கள் சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தாராளமான உரிமை உண்டு என்பதையும் நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தெரிவித்துள்ள அந்த அறிக்கையில் அச்சுறுத்தல் மற்றும் வன்முறை சம்பவங்கள் யாரால் யார் மீது நடத்தப்பட்டாலும் இவற்றை ஈழ மக்கள் ஜனநாயக கட்சி ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளார்.

## சிகிச்சைக்குச் சென்றவர் மருத்துவமனையில் மரணம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக நேற்று மருந்து எடுக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மரண்மடைந்துள்ளார்.

உடல் நலம் பாதிக்கப்பட்ட இவர் மருந்து எடுப்பதற்காக மருத்துவமனைக்குச் சென்றிருந்த வேளையே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புன்னாலையைச் சேர்ந்த அண்ணாசாமிக் குருக்கள் ரவீந்திரக் குருக்கள் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார். (மி, 100)

## திடீர் மரண விசாரணை அதிகாரி வேலணைப் பிரதேசத்துக்கு நியமனம்

(ஊர்காவற்றுறை)

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராஜா தியாகராசா என்பவர் வேலணைப் பிரதேச செயலர் பகுதிக்கு உட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி திடீர் மரண விசாரணை அதிகாரியாக நேற்று முன்தினம் ஊர்காவற்றுறை நீதிமன்றில் மு.ப. 10 மணிக்கு நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பொறுப்பினை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளார். இதன் மூலம் வேலணைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட திடீர் மரணங்கள் தொடர்பான விடயங்கள் இலகுவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில், மகளிர் தின நிகழ்வு நேற்றுக்காலை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு தொகுதியினரையும் காணலாம்.



# மத்.கல்லூரியின் தொடர் வெற்றியை முறியடித்தது சென்.ஜோன்ஸ்




(யாழ்ப்பாணம்)

வடக்கின் பெரும் போர் இனிங்ஸ் போட்டியைத் தொடர்ந்து நடாத்தப்படும் 50 ஓவர்கள் கொண்ட ஒரு நாள் போட்டியில சென்.ஜோன்ஸ் அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

யாழ் மத்திய கல்லூரி அணிக்கும் சென்.ஜோன்ஸ் அணிக்குமிடையில் நடைபெற்று வரும் வடக்கின் பெரும் போரைத் தொடர்ந்து நடாத்தப்பட்டு வரும் ஒரு நாள் போட்டி நேற்று சென. ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

கடந்த 1965ஆம் ஆண்டுக்குப் பின்னர் இரு அணிகளும் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்றே மோதியமை குறிப்பிடத்தக்கது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி 45.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெரிக் துசாந் 23, எட்வேட் எடின் 22, கோகுலன் 17, நிரோச் 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சத்தியேந்திரா மூன்று, விமல்ராஜ் நான்கு, ஹரிவதனன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி ஆரம்பத்தில் தடுமாறியது. 33 ஓட்டங்களைப் பெற்ற வேளை நான்கு விக்கெட்டுக்களை இழந்து பின்னடைவை எதிர்கொண்ட வேளை, இணைந்த ஹரிவதனன், விதுசன் இணை, அணியை சரிவிலிருந்து மீட்டு புதிய சாதனையையும் ஏற்படுத்தினர். ஐந்தாவது விக்கெட்டுக்காக யாழ். மத்திய கல்லூரி வீரர்களின் சாதனையாக இருந்த 93 ஓட்டங்களைக் கடந்து 103 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இறுதியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 32.1 ஓவர்களில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இதில் ஹரிவதனன் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் விதுசன் 33, சஞ்சயன் 11 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வதுசனன், ஜெரிக் துசாந் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வெற்றிக்குத் துணை புரிந்த ஹரிவதனன் போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இதேவேளை, கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை ஒரு நாள் போட்டியில் தொடர்ச்சியாக (4) நான்கு வெற்றிகளைப் பெற்று வந்த மத்திய கல்லூரி அணியின் தொடர் வெற்றிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி அணி நேற்று முற்றுப்புள்ளிவைத்துள்ளது. (எஸ், 20)

## வல்லையில் வீதி விபத்து இருவர் காயமடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை பிரதான வீதியில் வல்லைப் பாலத்தடியில் சென்றுகொண்டிருந்த ஆட்டோ பாலத்துடன் மோதுண்டதில் இரண்டு பேர் காயமடைநதனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நெலலியடி நோக்கி நேற்று இருவர் பயணம் செய்து கொண்டு இருக்கும்போது ஆட்டோவில் ஏற்பட்ட இயந் திரக் கோளாறு காரணமாகவே இவ்விபத்து ஏற்பட்டதாக சாரதி தெரிவித்தார்.

இந்த விபத்தில் நல்லூரைச் சேர்ந்த ஆட்டோ சாரதி ரவீந்திரன் சுதர்சன் (வயது-22), திருநெல்வேலியைச் சேர்ந்த க.ராஜேஸ்வரன் (வயது-55) ஆகிய இருவருமே காயமடைநதவர்கள் ஆவர்.

காயமடைந்தவர்கள் அச்சுவேலி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (மி, 100)

## புதிய கடற்கரை வீதியில் கரையொதுங்கும் கழிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகர் கடற்கரையோர பகுதிகளில் அதிகளவான கழிவுகள் தேங்கிக் கிடப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக இராணுவத்தினரால் திறந்து விடப்பட்ட புதிய கடற்கரை வதிகளிலேயே இக்கழிவுப் பொருட்கள் தேக்கமடைந்து காணப்படுவதுடன், அவ்வீதியால் செல்ல முடியாதவாறு துர்நாற்றம் வீசுவதாக அக் குடியிருப்பு மக்கள் அறியத் தந்துள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதைக் கவனத்தில் எடுத்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


## பெயர் மாற்றம்

அரியாலை மேற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி மகள் யோகரத்தினம் ஆகிய நான் வெளிப்படுத்துவது யாதெனில் திருமணத்தின் பின் எனது பெயரானது நடைமுறையிலும் மேலும் பல சட்டரீதியான ஆவணங்களிலும் நித்தியானந்தம் ரஞ்சி எனப் பயன்படுத்துவதனால் மேற்படி யோகரத்தினம் என்னும் பெயரை ரஞ்சி என மாற்றவேண்டிய தேவை தற்போது ஏற்பட்டுள்ளதால், இன்றிலிருந்து எனது பெயரை நித்தியானந்தம் ரஞ்சி என சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருவதோடு, என்னுடன் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளுக்கும் நித்தியானந்தம் ரஞ்சி எனப் பயன்படுத்துமாறு சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

(C/654) நித்தியானந்தம் ரஞ்சி.

நகர சபை, யாழ்ப்பாணம்.

ஒழுக்கம் என்பது ஒரு மரம். புகழ் என்பது அதன் நிழல். நிழலைப்பற்றியே நாம் அதிகமாக நினைக்கிறோம். ஏனோ மரத்தை மறைத்து விடுகின்றோம்.

- யாரோ-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## ஒன்றிணைந்த செயற்பாடு அவசியம்

2010 மார்கழி மாதம் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் ஓரளவுக்குத் திருப்தியை அளிக்கக் கூடியதாக உள்ளது.

கடந்த 16 ஆம் திகதி இணையத்தளம் மூலமாக வெளியான இப்பரீட்சை முடிவுகள் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு முழுமையாகக் கிடைக்காவிட்டாலும், நகரப் பாடசாலைகளிலும், கிராமப் பாடசாலைகளிலும் திருப்தியளிக்கும் வகையில் கூடிய பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

நாடு தழுவிய ரீதியில் நடைபெற்ற இப்பரீட்சையின் பெறுபேறுகள் கடந்த வருடங்களிலும் பார்க்க அதிகளவு அதிகரித்துக் காணப்படுவதாக கல்வியியலாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்த 5 லட்சத்து 24 ஆயிரம் மாணவர்களில் ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 112 மாணவர்கள் சித்திபெற்று (62 வீத மானவர்கள்) உயர்தர வகுப்புக்குத் தகுதி பெற்றுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்திருக்கிறார்.

2009 ஆம் ஆண்டுப் பரீட்சையில் ஆயிரத்து இருபது மாணவர்கள் மட்டுமே அனைத்துப் பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றிருந்தனர். ஆனால் இம்முறை 3 ஆயிரத்து 59 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் "ஏ" சித்தி பெற்றுத் தமது திறமையை வெளிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் 14 ஆயிரத்து 961 மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைத் தவறிவிட்டமையையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

கடந்த காலங்களில் பெரும்பாலும் இப்பரீட்சையில் பெருமளவு மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடங்களில் சித்தியடைத் தவறியிருந்தனர். ஆனால் இம்முறை கணித பாடத்தில் 61.61 சதவீத மானவர்களும், விஞ்ஞான பாடத்தில் 41.41 சத வீத மானவர்களும் சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்க பெறுபேறாகும்.

இதேவேளை, யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் பல பாடசாலைகள் தமது கல்வித் தரத்தைப் பேணி வருவதில் அக்கறையுடன் செயற்பட்டு வந்ததின் பெறுபேறாக நூறு வீத சித்தியுடன் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து மாணவர்களும் உயர்தரத்திற்குத் தகுதி பெற்றுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

யாழ்.மாவட்ட மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்களில் பெரும்பாலானோர் கல்வியில் சாதனை படைப்பவர்களாக அன்றும், இன்றும் இருந்து வருகின்றனர்.

அதிகாலை வேளையில் கல்விச் செயற்பாடுகளுக்காக வீட்டைவிட்டுப் புறப்படும் இவர்கள் இரவிலேயே வீடு திரும்புவதை நாம் தினமும் காண முடிகிறது.

வீட்டிலும் சரி, தனியார் கல்வி நிறுவனங்களிலும் சரி, தாம் கற்கும் பாடசாலைகளிலும் சரி கல்விக்காக கூடியளவு நேரத்தைச் செலவிடுவது அவர்களின் தனிப் பெருமை.

இவர்களின் ஆர்வத்திற்கு முட்டுக்கட்டை போடாது (ஒருசிலரைத் தவிர) பல பெற்றோர்கள் பணச் செலவையும் பாராது உற்சாகமூட்டி வருவதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியாது.


பொருளாதார வசதி குறைந்த பெற்றோர்கள் கூட தம் பிள்ளைகளைப் படிக்க வைக்க வேண்டுமென்பதற்காக தம்மை ஒறுத்துப் படிக்க வைப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

பரீட்சையில் திருப்பதிகரமான பெறுபேறுகளைப் பெற முடியாத பாடசாலைகளை இனங்கண்டு, அப் பாடசாலைகள் மீது அக்கறை எடுத்து அப்பாடசாலைகளும் சிறந்த பெறுபேறினைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் அவசியம் மேற்கொள்ள வேண்டும்.

எல்லாவற்றிக்கும் மேலாக அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் மாணவர்கள் கல்வியில் பல சாதனைகளைப் புரிய உதவ முடியும் என்பது திண்ணம்.

-ஆசிரியர்-

## யாழ்.செட்டிபுலம் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு சுற்றுமதில் அமைத்துத் தருவதாக வாக்குறுதி



(வேலணை)

வேலணையிலுள்ள செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்குச் சுற்றுமதில் அமைத்துத் தருவதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) உறுதியளித்துள்ளார்.

யாழ்.செட்டிபுலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் மேற்கொண்ட பெருமுயற்சியின் காரணமாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் குடிநீர் விநியோகத் திட்டத்தின் மூலம் பாடசாலைக்கு குடிநீர் வழங்குவதற்கான ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 8 மணியளவில் பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட அவர், எதிர்வரும் வருடம் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் பாடசாலைக்கான சுற்றுமதில் அமைத்துத் தருவதற்கான முயற்சியினை மேற்கொள்வேன் என உறுதியளித்துள்ளார்.

இந்நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணைப் பிரதேச அமைப்பாளர் சிவராசா (போல), பாடசாலை சமூகத்தினர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தீவகப் பிரதேசங்களினது தேவைகள் தொடர்பாகவும், அவற்றினை நிறைவேற்றுவதிலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் அவர்களும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரும் அயராது பாடுபட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

மத்தியஸ்தர் சபை ஆணைக் குழுவினால் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவிற்கான மத்தியஸ் . தர் சபை அமைக்கப்பட்டுள்ளது.

இச்சபையில் 26 பேர் உறுப்பினர்களாக நியமனம் பெற்றுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3 மணியளவில் நல்லூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனனால் வழங்கப்படவுள்ளது.

இம்மத்தியஸ்தர் சபையின உறுபபினர்களாக நியமனம் பெற்றோர் வருமாறு-

நா.நித்தியானந்தன் தவிசாளராகவும், க.தர்மநாயகம் உப தவிசாளராகவும், உறுப்பினர்களாக தா.தியாகமூர்த்தி, ம.வித்தியானந்தநேசன், மு.வாமதேவன், ச.ஜெயபாலசந்திரன், சி.தியாகராசா, சி.சிவதாசன், செ.இராமநாதன், திருமதி புஸ்பமதி மன்மதராசலிங்கம், திருமதி கமலாவதி பாலசுப்பிரமணியம், ஜெ.முத்துக்குமாரசாமி, ச.பிரின்ஸ் அருட்செல்வம், ச.செ.செலவராசா, த.பாலதயானந்தன், செ.குகதாசன், வ.ஆறுமுகம், கி.கந்தசாமி, த.மகேந்திரராசா, ஜோ.ஜோன்சிங்கம், க.நாகேந்திரா, மு.யோகராசா, பொ.ஜெயானந்தன், சோ.பரமசிவராசா, க.இராசநாயகம், இ.சத்தியேந்திரன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

## ஆயிரம் ரூபா கள்ள நோட்டுடன் அங்காடி வர்த்தகர் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் பெருந்தொகையான ஆயிரம் ரூபா கள்ளநோட்டுகளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது-

அங்காடி வியாபார வர்த்தகத்தில் ஈடுபடும் வவுனியா பூந்தோட்டம் மதீனா நகரைச் சேர்ந்த ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கண்டியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் வழங்கிய தகவலின்படியே குறித்த நபரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதன்போது குறித்த நபரிடம் இருந்து 79 ஆயிரம் ரூபா தாள்களும் ஒரு நூறு ரூபா தாளும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

## மாங்குளம் ஊடான முல்லைத்தீவு பஸ்சேவையை தொடருமாறு பயணிகள் கோரிக்கை விடுப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் இருந்து மாங்குளம் ஊடாக முல்லைத்தீவு சேவையில் ஈடுபட்டிருந்த இ.போ.ச. பேருந்து, சேவையிலிருந்து நிறுத்தப்பட்டதால் அப்பாதையூடாகப் பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேருந்து பழுதடைந்த காரணத்தால் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டதாகவும் திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னர் அது சேவையில் ஈடுபடும் எனவும் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவித்ததாகவும் கூறப்படுகிறது.

இப்பாதையூடான சேவை இடைநிறுத்தப்பட்டு இருவார காலமான நிலையில், இன்னமும் அவ்வழியே முல்லைத்தீவுக்கான பேருந்து சேவையில் ஈடுபடவில்லை. அதனால் வெளியிடங்களுக்கு வேலைக்குச் செல்லும் பணியாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதேவேளை திருத்தத்திற்கு விடப்பட்ட மேற்படி பேருந்து யாழ்பாணம்-பருத்தித்துறை வழித்தடத்தில் (750 இலக்க வழியில்) சேவையில் ஈடுபட்டு வருவதாகவும் இவ்வாறான செயல் தமக்கு வேதனை தருவதாகவும் இச்சேவையின்றிப் பாதிக்கப்பட்ட பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் தமது பயண சிரமத்தைக் குறைப்பதற்கு ஒரு பேருந்தினைப் பருத்தித்துறையில் இருந்து சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் பருத்தித்துறை இ.போ.ச காரியலய அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (17)

## சட்டவிரோதமாக போதைவஸ்து விற்பவர் மீது சட்ட நடவடிக்கை

(கிளிநொச்சி )

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாகப் போதைவஸ்து விற்பனை செய்பவர்கள் மற்றும் உற்பத்தி செய்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் கனகாம்பிக்கைக் குளப்பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின்போது அப்பிரதேசத்திற்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரியே இவ்வாறு தெரிவித்தார்.

சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படும் போதைவஸ்து தொடர்பாகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனினும் இது தொடர்பாக மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அத்துடன் போதைப் பொருள், மதுபாவனை மற்றும் இது தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவதைத் தடுக்கவேண்டும் எனவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இதனை மீறிச் சட்டவிரோதமாக செயற்படுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (28)

## தவிசாளர் தெரிவில் கூட்டமைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளைக் கைப்பற்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சி இச்சபைகளுக்கான தவிசாளர்களை நியமிப்பது குறித்து எதிர்வரும் வியாழக்கிழமை தீர்மானிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சபைகளுக்கான தவிசாளர்களாக பெரும்பாலும் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றவர்களே நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தவிசாளர்களை நியமிப்பது குறித்து த.தே. கூட்டமைப்பின் உயர்மட்டத் தலைவர்கள் கூடி முடிவு எடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (39)

# வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கு தென்னிலங்கை மதகுருமார் ஆதரவு

(வடமராட்சி)

வடமராட்சியிலிருந்து கொழும்பு சென்ற மீனவப் பிரதிநிதிகள் குழு முன்வைத்த பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்க்கமான முடிவு எடுக்கப்படும் என கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலய உயர் அதிகாரி ஏ.சுயின் அத்தான தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலய அலுவலகத்தில் நடைபெற்ற இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பான சந்திப்பில் இலங்கை மீனவர்களின் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டன.

இச்சந்திப்பில் வடமராட்சி மீனவப் பிரதிநிதிகள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து தெளிவுபடுத்தினார்கள்.

குறிப்பாக யாழ்.குடாக்கடற் பரப்பில இந்திய மீனவர்கள் இழுவைப்படகுகளின் மூலம் மேற்கொள்ளப்படும் மீன் பிடி நடவடிக்கையினால் கடல் வளம் அழிக்கப்படுவதாகவும் இதனால் தாங்கள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும் அவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைக் சேர்ந்த மீனவப் பிரதிநிதிகள் தெனனிலங்கை மீனவப் பிரதிநிதிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழக புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்

இச்சந்திப்பில் வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறிதது அறிந்த தென்னிலங்கை மதகுருமார்கள் தெரிவிக்கையில்:

இதுவரைகாலமும் இவ்வாறான பிரச்சினைகள் குறித்து எதுவும் தெரியாது எனவும் இன்றுதான் இது தொடர்பாகத் தாம் அறிந்துள்ளதாகவும் வடக்கு மீனவர்களின் பிரச்சினைக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்கத்தாம் முன்னின்று செயற்படுவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கை தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைபபின் தலைவர் கேமகுமார இணைப்பாளர் அன்ரன் யேசுதாஸ் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (70,100)

# தமிழ்ச் சொல் அகராதி வெளியிடப்பட்டுள்ளது

(தும்பளை)

சிங்கள மொழியில் தமிழ்ச் சொல் அகராதி நூல் வெளியீட்டு விழா கடந்த புதன்கிழமை மாலை 3 மணியளவில் யாழ்பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கலைப்பீடாதிபதி கலாநிதி.என்.ஞானகுமாரன், கொழும்பு பல்கலைக்கழக சிங்கள மொழிப்பீடத்தலைவர் அகலகொட சிறீசுமணதேரா் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். (62)





யாழ்.போதனா வைத்திய சாலையில் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கென வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்குப் பின்புறமாக திறந்துவைக்கப்பட்ட தேநீர்ச்சாலையின் முன்பக்கத் தோற்றத்தையும் உள்ளே வைத்திய உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். படம்: பார்த்தீபன

# கட்டட புனரமைப்புக்கென உலகவங்கி 50 லட்சம் உதவி

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தின் கட்டட புனரமைப்பு வேலைகளுக்கு சுமார் 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் யாழ்.அரச அதிபரிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக உலக வங்கியின் அபிவிருத்தித்திட்டங்களுக்கான நிதியிலிருந்து இந்நிதி ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த அனர்த்தத்தினாலும், சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினாலும் முழுமையாகச் சேதமடைந்திருந்த நிலையில் இருந்த இச் சங்கத்தலைமைக் காரியாலயம் மற்றும் தேவைகளுக்குரிய கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன.

வடமராட்சி கிழகில் தற்போது மக்கள் மீளக்குடியமர்தப்பட்டுள்ளதால், அங்கு பனந்தொழிலை நம்பி வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் எண்ணத்துடன் கூட்டுறவு உதவி ஆணையாளர் பெரும் சிரமங்களின் மத்தியில் இந்நிதி ஒதுக்கீட்டினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு கிராமத்தின் நுழைவாயில் அமைந்துள்ள வழிப்பிள்ளையார் ஆலயத்தின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

இவ் ஆலயப்புனரமைப்புப் பணிகள் நிறைவுறாத நிலையில் கீழ்த்தளம், கூரை போன்ற திருத்த வேலைகள் பூர்த்தி செய்வதற்கு பிள்ளையார் பக்தர்கள் உதவுமாறு பரிபாலன சபையினர் கேட்டுக்கொளகின்றனர். (23)

# ரெட்மோ ரெட்கபே திறப்பு

(கோப்பாய்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.மாவட்டக்கிளையால் வலிமேற்கு பொதுமக்கள் மாணவர்கள் நலன்கருதி வழக்கம்பரை காரைநகர் வீதியிலே ரெட்மோ ரெட்கபே(REDMO REDCAFE) என்னும் ஸ்தாபனம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆரம்ப நிகழ்வு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க யாழ் மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம தலைமையில் நடைபெற்ற போது வலிமேற்குப் பிரதேசசபைச் செயலாளர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு ரெட்மோ ரெட்கபேயை வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளார். (08)

# கவின்கலை மண்டபம் அமைப்பு

(கோப்பாய்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் இரண்டு கோடி ரூபா செலவில் கவின்கலை மண்டபம் அமைக்கப்பட்டு பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் விரைவில் மாணவர்களின் நுண்கலை செயற்பாட்டிற்கு இது பயன்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம் மண்டபம் கல்லூரியின் பழைய மாணவரும் தற்போது லண்டனில் தொழிலதிபரா கவிருக்கும் கந்தசாமி தர்மகுலசிங்கம் என்பவரின் நிதியுதவியின் மூலம் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (08)

# சாரண பயிற்சி

(பருத்தித்துறை)

இலங்கை சாரணர் சங்கம் பருத்தித்துறை மாவட்டம் நடத்தும் சாரண அணித்தலைவர்களுக்கான பயிற்சி ஒன்று எதிர்வரும் 26,27 ஆம் திகதிகளில் காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ்.கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக சாரண மாவட்ட சாரண ஆணையாளர் தெரிவித்துள்ளார்.(109)

# குப்பை கூழங்களால் நிரம்பி வழியும் குருமன்காடு பஸ்தரிப்பு நிலையம்

(வடமராட்சி)

வவுனியா குருமன்காடு பஸ் தரிப்பு நிலையம் குப்பை கூழங்களினால் நிறைந்து, துப்புரவு செய்யப்படாத நிலையில் அசுத்தமாகக் காணப்படுவதாக பயணிகள் விசனம் தெரிவிக்கிறனர்.

போக்குவரத்தை மேற்கொள்வதற்காக வரும் பொதுமக்கள் அமர்வதற்கும், சாரதிகள் இளைப்பாறுவதற்கும் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலை நீண்ட நாட்களாகக காணப்படுவதாகவும் இதுவரை எவரும் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவித்த பயணிகள், இனியாவது சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? எனக் கேள்வி எழுப்பிவருகின்றனர். (100)

# ஞானம் சஞ்சிகை நடத்திய சிறுகதைப் போட்டி முடிவுகள்

(தெல்லிப்பளை)

ஞானம் கலை இலக்கிய சஞ்சிகை நடத்திய புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்த சிறுகதைப் போட்டி முடிவுகள் - 2011 வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் சாம்பசிவம் அகிலேஸ்வரன் எழுதிய "கூடுகள் சிதைந்தபோது" சிறுகதை முதலாம் பரிசையும், எஸ்.பி. கிருஷ்ணன் எழுதிய "மற்றவை நேரில்" சிறுகதை 2 ஆம் பரிசையும், திருமதி கார்த்திகாயினி சுபேஸ் எழுதிய "எச்சில்" மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இதைவிட ஆறுதல் பரிசுகளை அஷ்ரப்சிஹாப்தீன் எழுதிய "ஆசியாவின் அதிசயம்", என்.சந்திரசேகரன் எழுதிய "சீட்டு பிஸ்கட்", எஸ்.பாக்கியசாமி எழுதிய "நினைவலைகள்", திருமதி கே.ஏ. ரஹீம் எழுதிய "என்னைப் பெற்றவள் யாரோ", உ.நிசார் எழுதிய "ஒப்புரவு", அல்ஹாஜ் ஏ.சி.ஜரீனா முஸ்தபா எழுதிய "அவள் தாயாகிவிட்டாள்", உ.முத்துவாழி எழுதிய "திமிறி எழு", ஆகியனவும் பெற்றுக் கொண்டன. (44)



கொழும்பு வைத்திய சேவை நிறுவனத்தின் கிளை நிலயத்தினை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக மேஜர் ஜெனரல் ஹத்துரு சிங்க திறந்துவைப்பதைக் காணலாம்.

# உறங்கலிருக்கை பெட்டிகளில் மூட்டைப் பூச்சிகள் தொல்லை

(வவுனியா நிருபர்)

வவுனியாவிற்கும் - கொழும்புக் கோட்டைக்கும் இடையில் இரவுச் சேவையில் ஈடுபடும் தபால ரயிலின் முதலாம் வகுப்பு உறங்கலிருக்கைப் பெட்டியில் மூட்டைப் பூச்சிகளுடைய தொல்லை காணப்படுவதாக பயணிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து வவுனியா ரயில் நிலைய அதிபர், ரயில்வே திணைக்கள மேலிடத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

கடந்த இருவார காலமாகவே மூட்டைப் பூச்சிகளுடைய தொல்லை அவதானிக்கப்பட்டுள்ளது. (39)

நகர சபை, யாழ்ப்பாணம்.



# யாழ். போதனா வைத்தியசாலையில் லிப்ட் வசதியின்றி நோயாளர் சிரமம்

(கொக்குவில்)

யாழ். போதனா வைத்திய சாலை வளாகத்தில் இயங்கி வந்த 5 நோயாளர் விடுதிகள் அமைந்திருந்த இடங்களில் புதிய மாடிக் கட்டடங்கள் அமைக் கப்பட்டு வருவதால் மேற்படி விடுதி நோயாளர்களும் ஏலவே முடிவடைந்த புதிய நான்கு மாடிக் கட்டடத்திற்கே மாற்றப்பட்டுள்ளனர்.

இதனால் நான்கு மாடிக ளுக்கும் நோயாளர்களை எடுத்துச் செல்வதற்கான லிப்ட் வசதிகள் இன்னமும் பொருததப் படாததால் நோயாளர்கள் மாத் திரமன்றி, அவர்களை ஸ்ரெச்ச ரில் வைத்துக்கொண்டு செல்லும் சிற்றூழியர்கள் மற்றும் பார்வை யிடச் செல்வோரெனச் சகல தரப்பினரும் பாதிக்கப்பட்டு வருவ தாகச் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

குறிப்பிட்ட நான்கு மாடிக் கட்டடத்தில் ஏலவே இரண்டொரு வருடங்களாக முதலாம், இரண் டாம் மாடிகளில் 5 இற்கும் மேற்பட்ட நோயாளர் விடுதி கள் இயங்கி வந்த தாயினும், 'லிப்ட்' வசதிகளில் கவனம் செலுத்தப்படாமலே இருந்து வந்தது.

தற்சமயம் மூன்றாம் நான் காம் மாடிகளில் கட்டட வேலை கள் பூர்த்தி செய்யப்பட்டு அவற்றிலும் கீழே இயங்கி வந்த குறிப்பிட்ட 5 நோயாளர் விடுதிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதனால் தற்சமயம் யாழ். போதனா வைத்தியசாலை யிலிருக்கும் ஒரே நான்குமாடிக் கட்டடத்தில் புற்றுநோய் மற் றும் பெண்ணியல் நோய் போன்ற பத்துக்கும் குறையாத நோயாளர் விடுதிகள் இயங் குகின்றன.

இவற்றில் சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்களில் மிகவும் இயலாதவர்களை எக்ஸ்ரே மற்றும் சத்திர சிகிச் சைக்கூடங்களுக்குக் கொண்டு சென்று மீளவும் கொண்டுவரும் சமயங்களில் 80 படிகளில் நோயாளர்களை ஸ்ரெச்சரில் வைத்து ஏற்றவும், இறக்கவும் தினமும் பல தடவைகள் மாயவேண்டி நேர்கிறது.

இதனால் நோயாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் சொல் லொணாத் துன்பங்களுக்கு உள்ளாகி வருவது குறிப்பிடத் தக்கது.

புதிதாக அமைக்கப்பட்டு வரு கின்ற கட்டடங்களுக்கும், முக் கியமாக மிக விரைவில் இந்த நான்கு மாடிக் கட்டடத் திற்கும் 'லிப்ட்' வசதிகளை சுகாதாரத் திணைக்களம் எப்போது செய்து கொடுக்கும் என்று மக்கள் அங்கலாய்க்கின்றனர். (68)



ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி முன்பள்ளியின் கால்கோள் விழாவின்போது பழைய மாணவர்கள் புதிதாக வருகைதந்த மாணவர்களை மாலைபோட்டு வரவேற்பதைக் காணலாம்.

# சேதமடைந்த விடுதிக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை

(வடமராட்சி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பிரதி அரச அதிபர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் விரைவில் புனரமைப்புச் செய்யப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவை நாலரைக்கோடி ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதுடன், இதற்கான ஏற்பாடுகளை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது.

கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் முற்றாகச் சேதமடைந்த இக்கட்டடங்களையே மீளவும் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இதில் முல்லைத்தீவு, துணுக்காய், மன்னார் கிழக்கு, ஒட்டுசுட்டான் ஆகிய பிரிவுக ளிலுள்ள விடுதிக் கட்டடங்களே புனரமைப்புச் செய்யப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (100)

# யு.என். கபிரற் நிறுவனத்தால் பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டம்

(கிளிநொச்சி)

யு.என்.கபிரற் நிறுவனத்தால் கிளிநொச்சி இரணைமடுப் பகுதியில் 140 பயனாளிகளுக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீட்டுத்திட்ட நடவடிக்கைகள் எதிர்வரும் மே மாதத்திற்கு முன்னர் முடிவுற வேண்டும் என நிறுவனம் அறிவித்துள்ளது. இவ்வீட்டுத்திட்டப் பணிகள் பூர்த்தியடைந்ததும் மேலும் 120 புதிய பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு இவ்வீட்டுத்திட்டம் வழங்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இவ்வீட்டுத்திட்டப் பணிகளைவிட கிளிநொச் சியிலுள்ள கிராமங்களில் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபி விருத்தித் திட்டங்களில் நிலவும் குறைபாடுகளை இனங்கண்டு அதனை அபிவிருத்தி செய்வது தொடர்பில், கிராம அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவொன்றைத் தெரிவு செய்துள்ளதாக இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

இக்குழுவினால் இனங்காணப்படும் குறைபாடுகள் உள்வாங்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (28)

# வடக்கு கிழக்குப் பகுதிகளில் மது, சிகரெட் விற்பனையை விஸ்தரிக்க நிறுவனங்கள் முயற்சி

## விழிப்பாக இருக்குமாறு எடிக் நிறுவனம் வேண்டுகோள்

(நல்லூர்)

யுத்தம் நிறைவடைந்த சூழ்நிலை யில், வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் தமது வியாபாரத்தை விஸ்தரிப்பதற்கு, மதுபான நிறுவனங் கள் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

இது தொடர்பாக எமது பிரதேச இளைஞர், யுவதிகள் விழிப்பாக இருக்க வேண்டுமென 'எடிக்' நிறுவன அதி காரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பைத் தளமாகக் கொண்டி யங்கும் மேற்படி நிறுவனம், அண்மை யில் தமது நிறுவன அதிகாரிகள் குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்திருந்தது. அவர்கள் யாழ்ப் பாணத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்ததுடன், மாவட்டச் செயலகத்தினூடாக பிரதேச செயல கங்களுக்கும் விஜயம் செய்து, அங்குள்ள அதிகாரிகளிடம் மது ஒழிப்புத் தொடர்பான பல்வேறு கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர்.

யாழ். குடாநாட்டின் மதுபாவனை தொடர்பாக அவர்கள் மேலும் தெரி விக்கையில் - இலங்கையில் சிகரெட் புகைப்பதன் மூலம் நாள் ஒன்றுக்கு 18 கோடி ரூபாவை விற்பனை நிறுவனங்கள் இலாபமாகப் பெற்றுக் கொள்ளும் அதேவேளை, சிகரெட் பாவனை மூலம் வருடமொன்றுக்கு இலங்கையில் 26 ஆயிரம் பேர் மரணிப் பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, தென்பகுதியில் பொது இடங்களில் மதுபானம், சிகரெட் பிடிப்பதற்குத் தடைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. எனவே, வீழ்ச்சியடையும் தமது விற்பனையை ஈடுசெய்வதற்கு மதுபான நிறுவனங் கள் பல்வேறு வியூகங்களை வகுத்து, வடபகுதிக்குள் தமது விற்பனையை விஸ்தரிக்க முற்பட்டுள்ளன.

எதிர்வரும் வாரத்தில் யாழ்ப் பாணத்தில் நடைபெறவுள்ள பாரம் பரிய கலைஞர்களின் கலை நிகழ்வு களூடாக மது விற்பனைக்கான பெரும் விளம்பரம் செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு வெளிநாட்டு நிறு வனங்களின் அனுசரணையுடன் மது விற்பனை நிறுவனங்கள் பிரதான அனுசரணை வழங்குகின்றன. கலை நிகழ்வுகள் என்ற போர்வையில் மதுபாவனை தொடர்பான காட்சிகள் வெளிக்காட்டப்படவுள்ளன.

ஒரு பாரம்பரிய கலை நிகழ்வில் எதற்காக மதுபாவனைக் காட்சிகள் இடம்பெறவேண்டும். இது குறித்து நாம் மிக விழிப்பாகச் செயற் படவேண்டுமென அவ்வதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (26)

## ஆதினியின் இன்றைய பலன்

20.03.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி பங்குனி 06

இராகுகாலம் 4.48–6.18, சுபநேரம் 9.18 –10.48

பிரதமை மு.இ 10.05, உத்தரம் மு.ப.9.06,

அமிர்தம், கரிநாள்,

இரண்டாம் தவக்கால ஞாயிறு.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– அமைதியில் விருப்பம், சகிப்புத் தன்மை, அடங்கிப்போதல்.

ரிஷபம்:– தனவிருத்தி, உதவிகள் செய்தல், மகிழ்ச்சி.

மிதுனம் :– உதவி செய்தல், மதிக்கப்படல், ஆன்மீக விருப்பு.

கடகம்:– பொறாமைப்படல், தர்க்கித்தல், முரண்பாடு.

சிம்மம்:– கடும் முயற்சி, பலவீனம், நிலை தளர்தல்.

கன்னி :– கடும் யோசனை, முயற்சி தாமதம், மனக் கிலேசம்.

துலாம் :– காரியசித்தி, பாராட்டப்படல், மகிழ்ச்சி.

விருச்சிகம்:– மனக் கவலை, முரண்பாடு, தர்க்கம்.

தனுசு:– விபத்து, பணச் செலவு, கடன்படல்.

மகரம்:– ஆரோக்கியம், கொண்டாட்டம், நண்பர் உதவி.

கும்பம் :– காரியத்தடை, நட்டம், பெரியோர் பகை.

மீனம்:– நற்செய்தி, நண்பர் ஆதரவு, கொண்டாட்டம்.



யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி மையத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுவதையும், கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் காணலாம்.

## இந்துக்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி

# முதல் வெற்றியைப் பதிவாக்கியது கொக்குவில் இந்து




(யாழ்ப்பாணம்)

இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டியில், கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட இத்தொடரில் முதல் வெற்றியை பெற்ற அணி என்ற சிறப்பையும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பதிவாக்கிக் கொண்டது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் இந்த இந்துக்களின் போர் நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நிறைவடைந்தது.

இதில் ஆறு விக்கெட்டுக்களை 82 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணி, அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிரிசோபன் 32, செந்தூரன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ராகுலன், பங்குஜன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




144 ஓட்டங்கள் பின்னிலையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி இருந்தமையில் பாலோ-ஓன் முறையில் மீண்டும் துடுப்பாட கொக்குவில் இந்துக் கல்லூரி அணியால் அழைக்கப்பட்டது.

இதற்கமைய இரண்டாவது இனிங்சிற்காக களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி, 36 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 108 ஓட்டங்களைப் பெற்று இனிங்ஸ் மற்றும் 36 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் பார்த்தீபன் 28, கிரிஷோபன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பங்குஜன் நான்கு, உத்தமக்குமரன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இவ்வெற்றியின் மூலம் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி இந்துக்களின் போரில் முதல் வெற்றியைப் பதிவாக்கிய அணி என்ற சிறப்பைப் பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பங்குஜன் தெரிவானார். மற்றும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் உத்தமக்குமரனும், சிறந்த பந்து வீச்சாளராக கொக்குவில் இந்துக் கல்லூரி அணியைச் சேர்ந்த ராகுலனும், சிறந்த களத்தடுப்பாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த நிருஜனும் தெரிவானார்கள்.

இப்போட்டி நிகழ்வில், கல்விச் சமூகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (மி)




போட்டியின் ஆட்டநாயகன் விருதைப் பெறும் பங்குஜன்



சிறந்த துடுப்பாட்ட விருதைப் பெறும் உத்தமக்குமரன்




சிறந்த பந்துவீச்சு விருதைப் பெறும் கோகுலன்



சிறந்த களத்தடுப்பாளர் விருதைப் பெறும் நிருஜன்

## கபிலன் அதிரடிச் சதம் : கோகுலன் சகலதுறையில் ஜொலிப்பு

# "வீரர்களின் போரில்" மகாஜனா ஆதிக்கம்




(யாழ்ப்பாணம்)

கபிலன், கோகுலன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 'வீரர்களின் போர்' இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணி ஆதிக்கம் செலுத்தி வருகின்றது.

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்கும் இடையில் இடம்பெற்று வரும் 'வீரர்களின் போர்' என வர்ணிக்கப்படும் இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி நேற்று ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கந்தாவரோதயக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்சிற்காக களமிறங்கிய மகாஜனாக் கல்லூரி அணி, கபிலன், கோகுலன் ஆகியோரின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது. இறுதியில் மகாஜனாக் கல்லூரி அணி அதன் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மிகச் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய கபிலன் 98 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 16 பவுண்டரிகள் அடங்கலாக 104 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அணித் தலைவர் கோகுலன் 63 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், 12 பவுண்டரிகள் அடங்கலாக 66 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் ஜனந்தன் 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஜீவிசன் நான்கு, புருஷோத்மன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு முதல் இனிங்சிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி, கோகுலனின் சிறப்பான பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது தடுமாறியது. இறுதியில் அதன் முதல் இனிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 78 ஓட்டங்களைப் பெற்றது. இதில் றொபேட் நிஷான் 22, சிந்துஜன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் 14 ஓவர்களை வீசிய கோகுலன் 25 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் மோசிகீரன் மூன்று, டிலக்சன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி 189 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் மகாஜனாக் கல்லூரி அணியில் பலோ-ஓன் முறையில் மீண்டும் துடுப்பாட அழைக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸைத் தொடர்ந்த ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, விக்கெட் இழப்பின்றி எட்டு ஓட்டங்களைப் பெற்றிருந்தது.



கபிலன்

இதேவேளை, காலை நடைபெற்ற ஆரம்ப நிகழ்வுகளில் கல்விச் சமூகத்தைச் சேர்ந்த பல உயர் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (42,44)



## தினமுரசு பாகிஸ்தான் எதிர் அவுஸ்ரேலியா SCORE CARD

மைதானம் : கொழும்பு திகதி : 19-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி அவுஸ்ரேலியா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) வேன் வொட்சன் | b உமர் குல் | 09 |
| 02) ஹடின் | c கம்ரன் b வஹாப் றியாஸ் | 42 |
| 03) ரிக்கி பொண்டிங் | c கம்ரன் b மொகமட் ஹபீஸ் | 19 |
| 04) மைக்கல் கிளார்க் | b அப்துல் ரசாக் | 34 |
| 05) வைற் | run out மிஸ்பா/கம்ரன் | 08 |
| 06) மைக் ஹசி | c மிஸ்பா b அப்துர் ரஹ்மான் | 12 |
| 07) ஸ்மித் | b அப்ரிடி | 25 |
| 08) ஜோன்சன் | c கம்ரன் b அப்துல் ரசாக் | 00 |
| 09) கிரெய்ஜா | b உமர் குல் | 07 |
| 10) பிரெட்லீ | c மிஸ்பா b உமர் குல் | 05 |
| 11) டெய்ட் | not out | 00 |
| உதிரிகள் | (lb 5, w 10) | 15 |
| மொத்தம் | (all out :46.4 ஓவர்கள்) | 176 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) கம்ரன் அக்மல் | lbw b பிரெட்லீ | 23 |
| 02) மொகமட் ஹபீஸ் | c&b பிரெட்லீ | 05 |
| 03) அசாட் சபீக் | c வொட்சன் b ஜோன்சன் | 46 |
| 04) யூனிஸ்கான் | c ஹடின் b பிரெட்லீ | 31 |
| 05) மிஸ்பா உல்-ஹக் | c ஹடின் b பிரெட்லீ | 00 |
| 06) உமர் அக்மல் | not out | 44 |
| 07) அப்ரிடி | c பிரெட்லீ b கிரெய்ஜா | 02 |
| 08) அப்துல் ரசாக் | not out | 20 |
| 09) அப்துர் ரஹ்மான் | | |
| 10) உமர் குல் | | |
| 11) வஹாப் றியாஸ் | | |
| உதிரிகள் | (b 2, lb 1, w4) | 07 |
| மொத்தம் | (6 w: 41 ஓவர்கள்) | 178 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| உமர் குல் | 7.4 | 30 | 03 |
| அப்துர் ரஹ்மான் | 10 | 34 | 01 |
| அப்ரிடி | 09 | 34 | 01 |
| மொகமட் ஹபீஸ் | 10 | 26 | 01 |
| அப்துல் ரசாக் | 04 | 08 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பிரெட்லீ | 08 | 28 | 04 |
| டெய்ட் | 08 | 37 | 00 |
| ஜோன்சன் | 09 | 40 | 01 |
| வொட்சன் | 06 | 26 | 00 |
| கிரெய்ஜா | 10 | 44 | 01 |

**4 விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணி வெற்றி. ஆட்டநாயகன் : உமர் அக்மல்**

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான போட்டியில் பாகிஸ்தான் அணி நான்கு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 40ஆவது போட்டி நேற்று கொழும்பு பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 46.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹடின் 42 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய பாகிஸ்தான் அணி 41 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. ஆட்டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்ற உமர் அக்மல் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.



## இன்றைய ஆட்டம்

**சிம்பாப்வே எதிர் கென்யா**


மைதானம் கொல்கத்தா : பகல் ஆட்டம்

**இந்தியா எதிர் மேற்கிந்தியத்தீவுகள்**

மைதானம் சென்னை : பகலிரவு ஆட்டம்

## காலிறுதிப் போட்டி சவாலானது என்கிறார் சங்கக்கார


நியூசிலாந்து அணிக்கெதிரான வெற்றி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. கால் இறுதிக்கு முன்னர் பெற்ற இந்த வெற்றி நம்பிக்கையை அளிக்கிறது. ஆனால் கால் இறுதிப் போட்டி மிகுந்த சவாலானது. இதுதான் மிகவும் சோதனை நிறைந்தது. நான் உட்பட அனைத்து வீரர்களும் இதே திறமையுடன் கால் இறுதியில் விளையாடுவோம் என்று நம்புகிறேன். நான் சதம் அடித்து அணியின் வெற்றிக்கு முக்கிய பங்கு வகித்தது மகிழ்ச்சிதான். முரளீதரனின் பந்துவீச்சு மிகவும் சிறப்பாக இருந்தது. இவ்வாறு நியூசிலாந்துடான வெற்றி குறித்து இலங்கை அணித்தலைவர் சங்கக்கார தெரிவித்தார்.



## தென்னாபிரிக்கா வெற்றி

(டாக்கா)

பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் தென்னாபிரிக்க அணி 206 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 39ஆவது போட்டியாக நடைபெற்ற இந்த ஆட்டம் டாக்காவில் நேற்றுப் பகல் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய தென்னாபிரிக்கா அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கலிஸ் 69 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்கு ஆடிய பங்களாதேஷ் அணி 28 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது. இதில் ஷாகிப் அல் ஹசன் 30 ஓட்டங்களைப் பெற்றார். மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றின சொட்சொவே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.




## தினமுரசு தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ் SCORE CARD

மைதானம் : டாக்கா திகதி : 19-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி தென்னாபிரிக்கா : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஏ. அம்லா | b அப்துர் ரசாக் | 51 |
| 02) ஸ்மித் | st ரகீம் b மொகமதுல்லா | 45 |
| 03) ஜக் கலிஸ் | c&b ஷாகிப் அல் ஹசன் | 69 |
| 04) டுமினி | c ரகீம் b ஹொசெய்ன் | 17 |
| 05) டு. பிளசிஸ் | c இக்பால் b ஹொசெய்ன் | 52 |
| 06) வான் வைக் | b ஷாகிப் அல் ஹசன் | 05 |
| 07) போத்தா | run out ஹொசெய்ன் | 12 |
| 08) பீற்றர்சன் | not out | 22 |
| 09) வெய்ன்பார்னெல் | b ஹொசெய்ன் | 00 |
| 10) சொட்சொவே | not out | 04 |
| 11) இம்ரான் தாஹிர் | | |
| உதிரிகள் | (lb 3, w 4) | 07 |
| மொத்தம் | (8 w : 50 ஓவர்கள்) | 284 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தமீம் இக்பால் | c வான்வைக் b சொட்சொவே | 05 |
| 02) இம்னுல் கைஸ் | b சொட்சொவே | 04 |
| 03) ஜூனெய்ட் சித்திக் | lbw b போத்தா | 02 |
| 04) ஷாரியா நபீஸ் | b சொட்சொவே | 05 |
| 05) முஸ்டிகுர் ரகீம் | c ஸ்மித் b பீற்றர்சன் | 03 |
| 06) ஷாகிப் அல் ஹசன் | c வான்வைக் b பீற்றர்சன் | 30 |
| 07) மொகமதுல்லா | run out போத்தா/வான்வைக | 05 |
| 08) நயீம் இஸ்லாம் | b பீற்றர்சன் | 08 |
| 09) சரீப் இஸ்லாம் | b பீற்றர்சன் | 00 |
| 10) அப்துர் ரசாக் | c பீற்றர்சன் b இம்ரான் தாஹிர் | 00 |
| 11) ரூபில் ஹொசெய்ன் | not out | 08 |
| உதிரிகள் | (lb 5, w3) | 08 |
| மொத்தம் | (all out: 28 ஓவர்கள்) | 78 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சரீப் இஸ்லாம் | 05 | 44 | 00 |
| ரூபில் ஹொசெய்ன் | 08 | 56 | 03 |
| அப்துர் ரசாக் | 10 | 47 | 01 |
| மொகமதுல்லா | 10 | 46 | 01 |
| ஷாகிப் அல் ஹசன் | 10 | 46 | 02 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| ஜே. போத்தா | 07 | 23 | 01 |
| சொட்சொவே | 05 | 14 | 03 |
| வெய்ன் பார்னெல் | 04 | 04 | 00 |
| பீற்றர்சன் | 07 | 12 | 04 |
| இம்ரான் தாஹிர் | 05 | 20 | 01 |

**206 ஓட்டங்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி. ஆட்டநாயகன் : சொட்சொவே**

அனுசரணையாளர்: டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்



அனைத்து வகையான மின் உபகரணங்களையும்
மின்சாதனங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



(C/618) 62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ் T.P. :- 021 222 4040 ICC Cricket World Cup 2011

# மீண்டுமொருமுறை புதிய வேட்பாளர் பட்டியலை வெளியிடவேண்டிய கட்டாயத்தில் அ.தி.மு.க



(சென்னை)

கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருப்பது மூலம், புதிய வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட வேணடிய கட்டாயத்தில் அ.தி.முக உள்ளது.

கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்குவதற்கு முன்னதாகவே, கடந்த 16 ஆம் திகதி இரவு 160 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் பட்டியலை அ.தி.மு.க அறிவித்தது. இதனால் ஏற்பட்ட அதிருப்தி காரணமாக தே.மு.தி.க, இடதுசாரிக் கட்சிகள் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள், தனியாக ஆலோசனை நடத்தி மூன்றாவதாக ஒரு அணியை அமைக்க ஆலோசனையில் ஈடுபட்டன.

இதனைத் தொடர்ந்து அக்கட்சிகளுடன் சமரசம் மேற்கொண்ட அ.தி.மு.க தலைமை, அக்கட்சிகள் விரும்பிய தொகுதிகளை அளித்தது. அவற்றில் அ.தி.மு.க ஏற்கனவே அறிவித்த தொகுதிகளும் இடம்பெற்றுள்ளது.

இதன்படி அ.தி.மு.க வேட்பாளர்கள் போட்டியிடுவார் கள் என்று அறிவிக்கப்பட்ட திண்டுக்கல், கீழ்வேலூர், பெரம்பூர், மதுரை தெற்கு, பெரியகுளம், திருப்பூர் தெற்கு, விக்கிரவாண்டி ஆகிய தொகுதிகள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டது.

திருத்துறைப்பூண்டி, சிவகங்கை, பவானி, புதுக்கோட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆகிய தொகுதிகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

தென்காசி, நாக்குநேரி ஆகிய தொகுதிகள் சமத்துவ மக்கள் கட்சிக்கு ஒதுக் கப்பட்டுள்ளது. ஒட்டபிடாரம் புதிய தமிழகம் கட்சிக்கு ஒதுக் கப்பட்டுள்ளது. உசிலம்பட்டி பார்வர்டு பிளாக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டணிக் கட்சிகள் விரும்பிய தொகுதிகளை கொடுத்ததால் இதுவரை 16 தொகுதிகளை அ.தி.மு.க இழந்துள்ளது. இன்னமும் தே.மு.தி.கவுக்கு தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை. தே.மு.தி.கவுக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளிலும் அ.தி.மு.க சிலவற்றை இழக்க நேரிடும் என்று கூறப்படுகிறது. எனவே புதிய பட்டியலை அ.தி.மு.க வெளியிட வேண்டிய நிலையிலுள்ளது.

இதற்கிடையில் ம.தி.மு.க நிர்வாகிகளுடனும் அ.தி.மு.க தேர் தல் குழு பேசி வருகிறது. பேசசு வார்த்தையில் உடன்பாடு ஏற் பட்டால் அ.தி.மு.க போட்டியிடும் தொகுதிகளின் எண்ணிக்கை குறையும்.

# எதிர்வரும் 24 ஆம் திகதி கலைஞர் வேட்புமனுத்தாக்கல்

(சென்னை)

நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தலில் தி.மு.க தலைவர் கருணாநிதி திருவாரூர் தொகுதியில் போட்டியிடுகிறார். இதற்கான வேட்புமனுவை வரும் 24 ஆம் திகதி அவர் தாக்கல் செய்கிறார்.

தி.மு.க தலைவர் கருணாநிதி திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் திருச்சியில் நடைபெறும் தேர்தல் பிரசார பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு தி.மு.க வேட்பாளர்களை ஆதரித்துப் பேசுகிறார்.

இதுகுறித்து தி.மு.க தலைமைக் கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தி.மு.க தலைவர் கருணாநிதி வரும் 23 ஆம் திகதி மாலை திருவாரூரில் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தைத் தொடங்குகிறார். அன்று மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

24 ஆம் திகதி காலை 11 மணிக்கு திருவாரூர்த் தொகுதியில் வேட்புமனுத் தாக்கல் செய்கிறார். 24 ஆம் திகதி மாலை 6 மணிக்கு தஞ்சாவூர் தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்கிறார். 25 ஆம் திகதி மாலை 6 மணிக்கு திருச்சியில் நடக்கும் தேர்தல் பிரசாரப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இழுபறி நிலையில் அ.தி.மு.க - ம.தி.மு.க

(சென்னை)

ம.தி.மு.கவிடம் முதல்கட்ட பேச்சுவார்த்தையை நடத்திய அ.தி.மு.க, அதன்பிறகு அக்கடசியுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இந்நிலையில் கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கியதுபோக மீதமுள்ள 160 தொகுதிகளில் அ.தி.மு.க போட்டியிடும் வேட்பாளர்களை அ.தி.மு.க தலைமை அறிவித்தது.

இந்நிலையில் அதிமுக தரப்பில் இருந்து வைகோவிடம் சமரச பேச்சுவார்த்தை நடந்தது. ம.தி.மு.க தலைமையகத்தில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தையில் பங்கேற்ற செங்கோட்டையன் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர், வைகோவின் முடிவுகளைத் தெரிவிக்க போயஸ் கார்டன் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் நேற்று ம.தி.மு.க கொள்கை பரப்புச் செயலாளர் நாஞ்சில் சம்பத், அ.தி.மு.க. கூட்டணிக்கு ஜெயலலிதா அழைத்தாலும், இணைய மாட்டோம் என்றும், எங்களுக்குப் புதிய வாசலைத் திறந்து விட்ட ஜெயலலிதாவுக்குக் கோடி நன்றி என்றும், மற்றப்படி அனைததும் கட்சியின் உயர்மட்டக் குழுவில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ முடிவு செய்வார் என்றும் கூறியிருந்தார். இதனால் அரசியல் வட்டாரத்தில் பரபரப்பு நிலவுகிறது.

# சினிமா வேறு, அரசியல் வேறென விஜய்க்கு அறிவுரை கூறும் குஷ்பு



(சென்னை)

நடிகர் விஜய் அரசியலுக்கு வருவார் எனப் பரபரப்பாகப் பேசபபடுகிறது. இந்தத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியை ஆதரிபபார் என்றும் சில மாதங்களுக்குப் பிறகு தனிக்கட்சி துவங்கி முழு நேர அரசியலில் குதிப்பார் என்றும் கூறப்படுகிறது.

விஜய்யும் விரைவில் அரசியலுக்கு வருவேன் என்று பேசி வருகிறார். இதற்காகத் தனது ரசிகர் மன்றத்தை மக்கள் இயக்கமாக மாற்றியுள்ளார்.

விஜய் அரசியலுக்கு வருவது பற்றி நடிகை குஷ்பு கூறியதாவது -

மக்கள் பணிகளில் ஈடுபட விரும்பும் யாரும் அரசியலில் ஈடுபடலாம் ஆனால் சினிமா வேறு அரசியல் வேறு என்பதை உணர வேண்டும். சினிமாவில் நடிக்கும்போது ரசிகர்கள் கை தட்டுவார்கள். விசில் அடித்தும் ரசிப்பார்கள். அவர்கள் எல்லோருடைய வாக்கும் எமக்குத் தான் விழும் என்று எதிர்பார்த்து அரசியலுக்கு வரக்கூடாது.

சினிமாவை விட அரசியல் கஷ்டமான விடயம். நடிகைகளில் ஜோதிகாவையும், நடிகர்களில் கார்த்திக்கையும் எனக்குப் பிடிக்கும். அனுஷ்கா வும் என்னைக் கவர்ந்துள்ளார்.

சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியை ஆதரித்து பிரசாரம் செய்ய முடிவு செய்துள்ளேன். எதிர்க்கட்சித் தலைவர்களை தாக்கிப் பேச மாட்டேன். குறிப்பாக சரத்குமார், வஜயகாந்த், கார்த்திக் போன்றோரை விமர்சிக்க மாட்டேன் எனத் தெரிவித்தார்.

# எம்.பிக்களுக்கு லஞ்சமா? பிரதமர் மன்மோகன் மறுப்பு




(சென்னை)

2008 ஆம் ஆண்டு மத்திய அரசுக்கு எதிரான நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற எம்.பி.ககளுக்கு கோடிக்கணக்கில் பணம் கொடுக்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் இணையதளம் பரபரப்புத் தகவலை வெளியிட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக பாராளுமன்றத்தில் பா.ஜனதா கட்சியினர் கடும் அமளியில் ஈடுபட்டனர். அதைத்தொடர்ந்து இது தொடர்பாக பிரதமர் மன்மோகன்சிங் விளக்கம் அளித்தார். அப்போது எம்.பி.க்களுக்குப் பணம் கொடுத்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டை மறுத்தார்.

எம்.பி.க்களுக்குப் பணம் கொடுத்தது பற்றியோ, அது தொடர்பாக நடந்த சம்பவங்கள் பற்றியோ எனக்கு எதுவும் தெரியாது. காங்கிரசில் இருந்தோ, மத்திய அரசில் இருந்தோ யாரும் சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்று தெரிவித்தார்.

# ஞாயிறு நற்சிந்தனை



மனிதர்களில் மூன்று வகையானோர்களைக் காண முடியும். எப்போதும் கலகலப்புடன் மகிழ்வாய் இருப்பவர். அரைவாசி நேரங்களில் மகிழ்வும், துக்கமும் மாறி இருப்பவர்கள், எந்தவித உணர்வுகளுமின்றிக் கடினமான மனநிலையில் இருப்பவர்கள் என மூன்று வகையானவர்களைக் காணமுடியும். எந்த மனிதனும் தனித்து வாழமுடி யாது. மனித உறவுகள் இருப்பவரிடந்தான் மகிழ்வைக் காண முடியும். மனிதன் தனித்தீவல்ல. மனித உறவுகள் வளர்க்கப்படவேண்டும். தமது உணர்வுகளை, உரையாடல்களை கருத்துப்பரிமாற்றங்கள் ஊடாக சிறந்த மனித உறவைக் கட்டி வளர்க்க முடியும் என்பதை ஒன்றுகூடல்களில் காண்கிறோம்.

துன்பத்தை, மகிழ்ச்சியை மற்றவரிடம் பகிர்ந்து கொள்வது இறைவன் மனிதனுக்கு மட்டுமே கொடுத்த கொடையாகும். புன்னகைக்கவும், உறவாடவும், கலந்து பேசுவதற்கான சிறப்பையும் அவர் எமக்குக் கொடுத்துள்ளார். அதைப் பயன்படுத்தும் விதத்தில் தான் அதனை அனுபவிக்க முடியும். உங்கள் புன்னகை மற்றவருடைய உறவை மேம்படுத்த முடியும். உங்கள் தொடர்பாடல்கள் தேசத்தின் அமைதிக்கும், மகிழ்ச்சிக்குமான நெருக்கீடுகளை தவிர்க்கும் ஒரு கருவியாக உள்ளது. ஆகவே, மனிதர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எதிர்ப்படும் சந்திப்புகளை பயனுள்ளதாக்கி, மகிழ்வான வாழ்வுக்கு வழிகோலுவோம்.

யா.அலெக்சாண்டர்
மறையாசிரியர்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

பத்தாவது அகவையில்



பெயர்: க.நிவேதா
முகவரி: இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. .............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

[illegible] படிப்பகம்



# அரபுநாடுகளில் கிளர்ச்சி, ஜப்பான் அனர்த்தத்தால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்படும் அபாயம்

## நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

எண்ணெய் வள நாடுகளில் இடம்பெறும் அரசியல் கிளர்ச்சிகள் மற்றும் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி என்பவற்றால் இலங்கையின் பொருளாதாரம் பெரும் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இதில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி கடுமையான பாதிப்பை எதிர்நோக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொருளாதார ரீதியாக இலங்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டாலும், அது பாரிய பாதிப்பாக இல்லை என்று பெருந்தோட்டத்துறை அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். லிபியாவின் திரிபோலி உள்ளிட்ட துறைமுகங்கள் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

"எகிப்தின் அரசியல் குழப்பங்களால் இலங்கைக்கு அதிக பாதிப்பில்லை. வட ஆபிரிக்க நாடுகளுக்கு கென்யாவே பெரும்பாலும் தேயிலையை ஏற்றுமதி செய்கிறது. ஆனாலும் நாம் ஆரம்பப் பின்னடைவையே சந்தித்துள்ளோம்" என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க கூறியுள்ளார்.

வட ஆபிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகளான யேமன், ஜோர்தான், அல்ஜீரியா, ஈரான், ஓமான் போன்ற நாடுகளில் அரசாங்கங்களுக்கு எதிரான கிளர்ச்சிகள் தோன்றியுள்ளன. இதனால் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜப்பானில் ஏற்பட்டுள்ள பூகம்பம் மற்றும் சுனாமி அழிவுகளாலும் இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதப்படுகிறது. இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு உதவி ஜப்பானில் இருந்தே கிடைக்கிறது.

2009 ஆம் ஆண்டு வரை இலங்கையின் பிரதான உதவி வழங்குநராக ஜப்பானே இருந்து வந்தது. கடந்த ஆண்டு அந்த இடத்தைச் சீனா பிடித்துக் கொண்டது. ஆனாலும் ஜப்பானில் ஏற்பட்டுள்ள அழிவுகள் இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்க வாய்ப்பில்லை என்று இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் கூறியுள்ளார்.

# ஜப்பானுக்கான மேலதிக உதவிகளை அனுப்புவதற்கு ஜனாதிபதி உறுதிமொழி

(கொழும்பு)

பூகம்பம் மற்றும் சுனாமி, அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பான் மக்களுக்கு மேலதிக உதவிகளை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஜப்பான் தூதரகத்திற்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த, தூதுவர் குனியோ ரகாகாஷியைச் சந்தித்து கலந்துரையாடும் போதே இந்த உறுதி மொழியை அளித்தார். அத்துடன் பூகம்பம் மற்றும் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஜப்பான் மக்களுக்கு தனது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்ததோடு அவர்களுக்குத் தேயிலையை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜப்பானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் இலங்கை மருத்துவக் குழுவொன்று விரைவில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும், இந்தச் சந்திப்பில் ஜனாதிபதி தெரிவித்தார்.

சந்திப்பை முடித்துக் கொண்ட ஜனாதிபதி, ஜப்பானிய தூதரகத்தில் வைக்கப்பட்டுள்ள அனுதாபப் புத்தகத்திலும் கையெழுத்திட்டார்.

# சரியான தலைமைத்துவம் இன்மையே ஐ.தே.க தோல்வியடையக் காரணம்

## என்கிறார் ரோசி சேனாநாயக்க எம்.பி

(கொழும்பு)

சரியான தலைமைத்துவம் இல்லாததன் காரணமாகவே இம்முறை உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி இந்த நிலைமையை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டதாக அந்தக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரோசி சேனாநாயக்க தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி சபை தேர்தல் நெருங்கி வரும் சந்தர்ப்பத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மக்களுக்கு வழங்கிய அறிக்கைகள் கூட இந்தத் தேர்தல் தோல்விக்கு வழிவகுத்துள்ளது.

சஜித் பிரேமதாசவுக்குப் பதிலாக வேறு தலைவரை அடையாளம் காட்டும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சமிக்ஞைகளை வெளிப்படுத்தியிருந்தார். இதனால் சஜித் பிரேமதாசவிடம், ரணில் விக்ரமசிங்க, கட்சியின் தலைமைத்துவத்தை ஒப்படைக்க போவதில்லை என்ற பலத்த சந்தேகம் மக்களுக்கு ஏற்பட்டது.



இதன் காரணமாகவே கட்சி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தோல்வியைத் தழுவியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய தலைமைத்துவம் காரணமாக மக்கள் கட்சியை விட்டு, மேலும் மேலும் விலகி செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் சஜித் பிரேமதாசவிடம் கட்சியை ஒப்படைத்து, கட்சியை முன்னேற்ற வேண்டும் எனவும் ரோசி சேனாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட மற்றும் கலைக்கப்படவுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவது குறித்து அரசாங்கம் கலந்துரையாடி வருகிறது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் காரணமாக 67 உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டதுடன், உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுவதன் காரணமாக 34 உள்ளூராட்சிச் சபைகளின் பதவிக் காலம் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீடிக்கப்பட்டது.

# போலிவங்கி இணையத்தளங்கள் எச்சரிக்கை தேவையென அறிவுறுத்து

(கொழும்பு)

அதிகரித்துவரும் போலி வங்கி இணையத்தளங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு அணி (Slcert) இணையத்தள பாவனையாளர்களைக் கோரியுள்ளது.

போலி இணையத்தளங்கள் தொடர்பாக இலங்கையில் செயற்படும் சர்வதேச வங்கிகள் பலவற்றிடமிருந்து பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக Slcert அமைப்பின் சிரேஷ்ட பொறியியலாளர் ரோஹன் பள்ளியகுரு டெய்லி மிரர் இணையத்தளத்திற்குத் தெரிவித்தார்.

மோசடியாளர்கள்,போலி இணையத்தளங்களை உருவாக்கி பெரும் எண்ணிக்கையான மின்னஞ்சல்களையும் தமது போலி இணையத் தளத்தின் இணைப்பையும் அனுப்புகின்றனர். இவற்றின் மூலம் பயனாளர் பெயர் கடவுச் சொல் என்பவை திருடப்படுகின்றன. அதன்பின் அவை பல்வேறு மோசடிகளுக்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

# நாயாறு, கொக்கிளாய் பகுதிகளில் 10ஆயிரம் ஏக்கரில் தென்னைசெய்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பத்தாயிரம் ஏக்கரில் தென்னைச் செய்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


மகாவலி எல் வலயத்திற்குள் அடங்கும நாயாறு, மற்றும் கொக்கிளாய் பகுதிகளில் தென்னைச் செய்கையை மேற்கொள்வதற்கான வளங்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளதாக இந்த வலயத்தின் முகாமையாளர் பி.ஜி தயானந்த தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் தென்னைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்பவர்கள் தொடர்பாக கேள்விகள் கோரப்பட்டு ஒவ்வொருத்தருக்கும் 25 ஏக்கர் படி காணிகள் வழங்கப்படும்.

தென்னை அபிவிருத்திச் சபை நியாயமான விலையில் தென்னை நாற்றுக்களை வழங்குமெனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு தென்னைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட மூன்று வருடத்திற்குப் பின்னர் இப்பகுதியில் கால்நடைப் பண்ணை அமைப்பதற்கும் காணிகள் வழங்கப்படுமெனவும், மகாவலி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# முன்னாள் நாடாளுமன்ற பௌத்த பிக்குவால் 5 சிறார் துறவிகள் பாலியல் துஷ்பிரயோகம்



(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிரேஷ்ட பௌத்த பிக்கு ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாகக் கூறப்படும் சிறார் துறவிகளை நன்னடத்தைப் பிரிவினரின் பொறுப்பில் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தேசியவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அப்பரெக்கே புண்ணியானந்த தேரர், புதிதாக துறவறத்துக்கு வந்த இளம் பிக்குகள் ஐந்துபேரை பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

நீதிமன்றத்தின் முன்னைய உத்தரவொன்றின் படி, சிறார் பாதுகாப்பு அதிகாரசபை இரண்டு இளம் துறவிகளையும் கொழும்பு நீதவானின் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தியது.

சிறார்துறவிகள் இருவரும் நீதிவானிடம் அவரது அறையில் ரகசியமாக வாக்கு மூலங்களை அளித்துள்ளனர்.

புண்ணியானந்த தேரரால் துஷ்பிரயோகத்துக்குள்ளான மற்றைய மூன்று சிறார்களையும் ஆஜர்படுத்துமாறு பொலிசாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சிறார் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கையொன்றை கருத்தில் எடுத்த நீதவான், சந்தேகநபர் தலைமை பிக்குவாக பணிபுரியும் விகாரையில் வேறு சிறார் துறவிகள் இருக்கின்றனரா என்று ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறும் அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த பிக்கு,அவரது பொறுப்பில் இருந்த சிறார் துறவிகளை பாலியல் ரீதியில் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதை ஏற்றுக்கொண்டுள்ளதாக சிறார் அதிகாரசபை நீதிமன்றத்துக்கு முன்னர் அறிவித்திருந்தது.

பிணை வழங்கப்பட்டுள்ள அப்பரெக்கே புண்ணியானந்த தேரர், அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவினரின் பாதுகாப்புடன் நீதிமன்றத்தில ஆஜரானார்.

# பஹ்ரெய்னுக்கு செல்லவுள்ள இலங்கை அதிகாரிகள் குழு

(கொழும்பு)

பஹ்ரெய்னிலுள்ள இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கு உதவுவதற்காக குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து அதிகாரிகள் குழுவொன்று பஹ்ரெய்னுக்கு அனுப்பப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

பஹ்ரெய்னில் அந்நாட்டு அரசாங்கத்திற்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அங்கு நிலைமையை அவதானிப்பதற்கும் இலங்கையர்கள் தாயகம் திரும்புவதற்கு உதவுவதற்கும் 4 பேர் கொண்ட குழுவொன்று குவைத்திலுள்ள இலங்கைத் தூதரகத்திலிருந்து பஹ் ரெய்னுக்கு செல்லவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் உயங்கொட டெய்லி மிரருக்குத் தெரிவித்தார்.

# தீவக உயர்பாதுகாப்பு வலயங்களை படிப்படியாக குறைக்க நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்.தீவகத்திலுள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை படிப்படியாகக் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவகத்தில் சிவில் மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைச் செய்து கொடுக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

வடக்கில் மேற்கொள்ளப்படும் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு வசதியாகவும் சட்டம், அமைதி ஆகியன நிலவுவதற்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ளும் வகையிலும் அதி உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை இடம்பெறுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தீவகத்தில் மக்கள் வாழும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து இராணுவ முகாம்கள் மற்றும் மத்திய நிலையங்களை அகற்றும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சீரான சேவையை வழங்குவதற்கு பருத்தித்துறைச் சாலை முன்வருமா?

## கேட்கின்றனர் பயணிகள்

(பருத்தித்துறை)

கொடிகாமம் பருத்தித்துறை சேவையிலீடுபடும் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான 759ஆம் இலக்க பேருந்துகளின் சேவை சீரின்மையால் அவ் வழியே பயணம் செய்யும் பயணிகள் பல சிரமங்களை எதிர்கொள்ள நேரிடுவதாக பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இலக்கப் பேருந்துகள் காலையில் ஐந்து மணிக்கு பருத்தித்துறையில் இருந்து கொடிகாமம் நோக்கிப் பயணம் மேற்கொள்கின்றன. இதன் பின்னர் ஏழுமணிவரை எந்த விதமான பேருந்துகளும் சேவையில் ஈடுபடுவதில்லை.

இதனால் பருவகாலச்சீட்டைப் பெற்று, தூர இடங்களுக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஐந்து மணிக்கே பயணத்தை மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்படுகின்றது. இதற்கிடையில் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமாக இருந்தால் தனியார் பேருந்துகளில் பணத்தைக் கொடுத்தே பயணம் செய்யவேண்டிய நிலை உள்ளது. பருவகால சீட்டை (சீசன் டிக்கட்டை) பெற்றும் அதற்கு மேலதிகமாகவும் பணம் செலுத்த வேண்டிய நிலையைப் பயணிகள் எதிர் நோக்கியுள்ளனர்.

அதேவேளை, பிற்பகலில் கொடிகாமத்தில் இருந்து பருத்தித்துறைக்குப் புறப்படும் பேருந்து 3.45,4.15ஆகிய நேரங்களில் பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் எனக் கூறப்படுகின்ற போதிலும் இப்பேருந்துகள் 4 மணிக்கு முன்னதாகவே புறப்பட்டு விடுகின்றன. இல்லையேல் பேருந்துகள் பழுது என்ற (பிறேக் டவுன்) என்று கூறப்படுகின்றன.

இத்தகைய நிலையில் கிளிநொச்சி,பரந்தன்,மாங்குளம் முதலான தூர இடங்களில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள், அரச பணியாளர்கள் கொடிகாமத்தில் இறங்கி பருத்தித்துறை பேருந்தை தவற விடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது. இவ்வேளைகளில் பருவகாலச் சீட்டை (சீசன் டிக்கற்)பெற்றும் தனியார் பேருந்துகளில் கூடுதலாகப் பணத்தைச் செலுத்திப் பயணத்தை மேற்கொள்ள வேண்டி ஏற்படுகின்றது.

இல்லையேல் நான்கு மணியில் இருந்து ஐந்து மணிக்குப் புறப்படும் அரச பேருந்துக்காக காத்து நிற்க வேண்டியுள்ளது.

தூர இடங்களில் பணியாற்றி விட்டு ஒரு மணி நேரத்திற்கு மேலாக பேருந்துக்காக காவல் நிற்கும் இத்தகைய நிலையினைக் கருத்திற் கொண்டு இ.போ.ச உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட பயணிகள் தெரிவிக்கின்றனர். (17)

# ஜப்பானிலுள்ள இலங்கையர்களில் 280பேர் அழைத்து வரப்பட்டனர்

(கொழும்பு)

ஜப்பானில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பூகம்பம் மற்றும் சுனாமி அனர்த்தம் காரணமாக,ஏற்பட்ட அச்ச நிலையை அடுத்து இலங்கையைச் சேர்ந்த ஒரு தொகுதியினர் அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஜப்பானிலிருந்து புறப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர். இவ்வாறு முதல்தொகுதியில் வந்தவர்களில் 280பேர் அடங்கியுள்ளனர்.

15ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையான இலங்கைப் பிரஜைகள் ஜப்பானில் வசித்து வருவதாகவும் இவர்களை அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சும் சிறிலங்கன் விமான சேவையும் மேலதிக விமானங்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் விமான பயணச் சீட்டைப் பெறுவதற்கு பெருமளவானோர் காத்திருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்தது.

இதேவேளை ஜப்பானிலிருந்து நாடு திரும்புபவர்கள் அனைவரும் அணுக் கதிர் வீச்சுத் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளார்களா என விமான நிலையத்தில் வைத்து பரிசோதிக்கப்படுவரெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# புலித்தாலி அணிந்திருந்த பெண்ணை விடுதலை செய்தது கனேடிய நீதிமன்றம்

(கொழும்பு)

புலிகள் அணிவது போன்ற தாலியை அணிந் திருந்ததாகக் கூறி கனேடிய குடிவரவு அதிகாரிகளால் சிறையில் அடைக்கப்பட்ட, "சன் சீ" கப்பலில் சென்ற அகதிப் பெண்ணை விடுதலை செய்யுமாறு கனேடிய நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

"சன் சீ" கப்பலில் தனது குழந்தைகளுடன் அகதியாகக் கனடாவுக்குச் சென்ற பெண், புலிகள் அணிவது போன்ற தாலி அணிந்துள்ளதால்,அவர் மீது சந்தேகம் உள்ளதாக கனேடிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தடைசெய்யப்பட்ட புலிகள் அமைப்பைச் சேர்ந்தவராக அவர் இருக்கலாம் என்பதால் அடைக்கலம் கொடுக்க முடியாது என்று அவர்கள் கூறியிருந்தனர்.

அத்துடன் இந்தப் பெண் பேணப்பேயில் உள்ள சிறைச் சாலையில் தனித்து அடைக்கப் பட்டிருந்தார்.

இந்தப் பெண் கனேடிய சமஷ்டி நீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நிறுத்தப்பட்ட போது அவரது சார்பில் முன்னிலையான சட்டவாளர், திருமண நாளில் கணவன் கட்டிய தாலியையே அவர் அணிந் திருப்பதாகவும் அதுகுறித்து சந்தேகம் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினார்.

ஆனால் கனேடிய குடிவரவு அதிகாரிகள் அவரை வெளியே விடுவது ஆபத்தானது என்று கூறினர்.

ஆயினும் அந்தப் பெண்ணை 1000 டொலர் பிணையில் விடுதலை செய்ய கனேடிய நீதிமன்றம் உத்தரவிட்டது.

முன்னதாக இவரை கனேடிய நீதிமன்றம் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி அதிகார சபையால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுர்த்தி அதிகார சபை, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இச் சமுர்த்தித் திட்டத்தின் கீழ், பொதுக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதோடு, 500,000/= ரூபா செலவில் பெரியவிளான் கிராமத்தில் சமுர்த்திக் கடைத் தொகுதியொன்றும், சாவக்காட்டுப் பகுதியில் 900,000/=ரூபா செலவில் பொது மண்டபமொன்றும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மேலும் இப் பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன்கருதி, சுயதொழிற் பயிற்சி நிலையங்களும் அமைக்கப்பட்டுவருகின்றன.

# பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(விசுவமடு)

மாணவர்கள் தமது கற்றல் உபகரணங்களைக் கொண்டு செல்வதற்கு வசதியாக உலக உணவு ஸ்தாபனம் ஒரு தொகுதி புத்தகப் பைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட தேராவில் தமிழ் வித்தியாலயம்,பாரதி வித்தியாலயம்,விசுவமடு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கே நேற்று முன் தினம் இந்தப் புத்தகப் பைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்தப் புத்தகப் பைகளுடன் அப்பியாசக் கொப்பிகள், பேனாக்கள்,தொப்பி என்பனவும் வழங்கப்பட்டன.

தரம் 8 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு அவர்களின் கற்றல் தேவையை நிறைவு செய்யும் வகையில் இவை வழங்கப்பட்டதாக உலக உணவு ஸ்தாபன பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

மாணவர்களுக்கான மேற்படி பொருட்களை வழங்குவது குறித்து வலயக் கல்விப்பணிமனை கோரி இருந்ததாகவும், அதன் பொருட்டே இவை வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (17)

# பொலிஸ் அடையாள அட்டையை காட்டி கப்பம் பெற்றுவந்த அதிகாரி கைதானர்

(கொழும்பு)

தனது பொலிஸ் அடையாள அட்டையைக் காண்பித்து கப்பம் பெற்று வந்த பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரை மீரிஹான பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் ஏற்கனவே பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்ற காரணத்தால் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே இவர் கப்பம் பெற்று வந்துள்ளார்.

பொலிஸ் அடையாள அட்டையைக் காண்பித்து மீரிஹான பொலிஸ் அதிகாரி எனத் தன்னைக் கூறிய ஒருவர் நுகேகொடை பகுதியில் வியாபார நிலையங்களில் கப்பம் பெற்று வந்ததாக மீரிஹான பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இதனை அடுத்து செயலில் இறங்கிய மீரிஹான பொலிஸார் குறித்த சந்தேக நபரைக் கைது செய்தனர்.

பல குற்றச்செயல்கள் தொடர்பாக குறித்த நபர் ஏற்கனவே பணி நீக்கம் செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவித்துள்ள பொலிஸார், இவர் மீது நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெறுவதாகவும் தெரிவித்தனர் இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீரிஹான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைப் பணிப்பெண் லெபனானில் சடலமாக மீட்பு

(கொழும்பு)

லெபனானில் பாபபட எனும் நகரில் வீடொன்றில் பணிபுரிந்த இலங்கைப்பணிப் பெண் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயர் மாடிக் கட்டடத்தில் இருந்து விழுந்து குறித்த இலங்கைப் பணிப்பெண் உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கைப் பெண் தான் பணிபுரிந்த வீட்டிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளையில் இவ்வாறு மாடியில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளதாக அந்த நாட்டு பாதுகாப்புத் தரப்பினர் கூறியுள்ளனர்.

# மணற்காடு றோ.க.த.க பாடசாலை எல்லே போட்டியில் முதலிடம்

(நெல்லியடி)

பாடசாலைகளுக்கு இடையிலான வலயமட்ட பெண்களுக்கான எல்லே போட்டிகளில் யா/மணற்காடு றோ.க.த.க பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

பாடசாலைகளுக்கு இடையிலான எல்லேப் போட்டிகள் நேற்று முன்தினம் யா/ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. மேற்படி போட்டிகளில் பெண்களுக்கு இடையிலான எல்லேப் போட்டியிலேயே யா/மணற்காடு றோ.க.த.க.பாடசாலை முதலாமிடத்தைப்பெற்றது. போட்டியின் 2ஆம் இடத்தினை யா/மெதடிஸ்த பெண்கள் பாடசாலையும் மூன்றாம் இடத்தினை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (17)

# வடக்கில் மீள்குடியேறிய மக்களுக்கு 52மில்லியன் செலவில் மின்விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியேறிய மக்களுக்கு மின்சாரம் வழங்கவென இதுவரை 52 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் மின்சார வசதிகளை ஏற்படுத்த எட்டு மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதன் காரணமாக 339 குடும்பங்களுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு 44 மில்லியன் ரூபா செலவில் மின்சார வசதி செய்துகொடுக்கப்பட்டுள்ளது.இதன்மூலம் சுமார் 3000 குடும்பங்களுக்கு மின்சாரம் கிட்டியுள்ளது.

பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்

# கிராமிய மக்களின் விழிப்புணர்வு தேர்தல் மூலம் வெளிவந்தது

## அமைச்சர் சரத் அமுனுகம கூறுகிறார்



(கொழும்பு)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கிராமங்கள் எழுச்சி பெற்றுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கண்டி - குண்டசாலை பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே சர்வதேச நிதி ஒத்துழைப்பு தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் அபிவிருத்தியுடன் கிராம மக்களும் கைகோர்க்கும் முழுமையான விருப்பம் தேர்தல் பெறுபேறுகளின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தமது கட்சியினுள் நிலவும் உள்ளக கருத்து பேதங்களை கட்சியைச் சார்ந்தவர்கள் மத்தியில் மாத்திரம் கலந்துரையாடி தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை மக்கள் உணர்த்தியுள்ளதாக மேல் மாகாண சபை எதிர்கட்சித் தலைவர் மஞ்சிசிறி அரங்கல தெரிவித்துள்ளார்.

இதுதவிர, நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முன்னர் கட்சியின் நெருக்கடிகளை நிவர்த்திக்க வேண்டும் என, நாட்டு மக்கள் ஐக்கிய தேசிய கட்சிக்கு குறிப்புரைத்துள்ளதாக தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

# தேர்தல் வன்முறை தொடர்கின்றது

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நிறைவடைந்த பின்னர் சிறுசிறு தேர்தல் வன்முறைகள் பதிவாகியுள்ளதாக கபே இயக்கம் தெரிவித்துள்ளது.

பல பகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்கள் வெற்றியைக் கொண்டாட தேர்தல் சட்டங்களை மீறி வாகனப் பேரணி செல்வதாக அந்த இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாத்தறை, அம்பாந்தோட்டை, கண்டி மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் இவ்வாறான நடவடிக்கைகளைக் காண முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் வன்முறைச் சம்பவங்கள் குறித்து 9 முறைப்பாடுகள் தம்மிடம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்ததல் கண்காணிப்பு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# கட்சிக்கு உழைத்தவர்களுக்கு ரணில் நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

2011 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்காக பாடுபட்ட வேட்பாளர்கள் மற்றும் அதற்காக ஒத்துழைப்பு வழங்கிய ஆதரவாளர்கள் அனைவருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் தமது கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களித்த சகல வாக்காளர்களுக்கும் அவர் தமது நன்றியை தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிக்கையில், நேர்மையான பயணத்தில் நாட்டை காப்பாற்றும் பயணத்தின் இந்தத் தருணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்த அனைவருக்கும் தமது நன்றியைத் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.



நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி, எதிர்கால இலக்கை நோக்கி நாட்டை தயார்ப்படுத்தும் ஒரே தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# கண்டியில் வாகன விபத்து; காயமடைந்த பலர் மருத்துவமனையில்

(கொழும்பு)

கண்டி, பால கடுகண்ணாவ பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற பாரிய வாகன விபத்தினால் பலர் காயமடைந்துள்ளனர். மணல் ஏற்றிச் சென்ற லொறியொன்று 12 வாகனங்கள் மீது மோதியுள்ளது.

மணல் லொறியின் பிறேக் செயற்படாத நிலையில் அது வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பல வாகனங்ள் மீது மோதியதாக தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் வான் ஒன்று மலை முகட்டிலிருந்து பள்ளத்தில் வீழ்த்தப்பட்டுள்ளது.

காயமடந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மாவனல்லை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த லொறியின் சாரதி பொலிஸாரினால் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## நல்லிணக்க....

கண்டியில் தமது சாட்சி பதிவுகளை மேற்கொள்ளவுள்ளது.

இந்த சாட்சிகள் பிரதானமாக இரண்டு தரப்பினரிடம் இருந்து பதிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பெருந்தோட்ட மக்கள் மற்றும் கிராமத்தில் உள்ள சிங்கள மக்கள் ஆகிய தரப்பினரிடமே சாட்சி பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்மன் விக்ரமசிங்ஹ குறிப்பிட்டார்.

## உள்ளூராட்சி...

இதன்படி எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் குறித்த கால அவகாசம் நிறைவடைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## புலிகளுடன் இறுதி யுத்தம்....

நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச உதவிகள் தேவையாக உள்ளது. இலங்கை அரசாங்கம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபை முன்வைக்கின்ற விமர்சனங்கள் கிடைக்கக்கூடிய சர்வதேச உதவிகளை தடுப்பதற்கு வழிசெய்யும் என்றே நான் கருதுகிறேன்.

இலங்கையில் அமைதியை உருவாக்குவதற்கு சர்வதேச மன்னிப்புச் சபையுடன் இணைந்து நீண்டகால இணக்கப்பாட்டுடன் செயற்பட வேண்டிய தேவையுள்ளது.

இத்தேவைக்காகவே இலங்கை அரசாங்கத்தினால் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தையும், அமைதியையும் ஏற்படுத்தும் நோக்குடனேயே உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளிக்க சர்வதேச மன்னிப்புச் சபை முன்வர வேண்டும் என ஜாலிய விக்கிரமசூரிய அனுப்பி வைத்துள்ள அழைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எமது கடல் வளங்களை...

வருவதாகவும் ஆகவே சகலரும் பொறுமை காக்க வேண்டும் என்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

வட பகுதி கடற்தொழிலாளர்கள் முகம் கொடுத்து வருகின்ற பிரச்சினை என்பது வாழ்வாதார பிரச்சினையாகும். இது குறித்து நான் கடந்த மாதம் வடபகுதியின் கடற்தொழிளார் சமாசங்களை அழைத்து கலந்துரையாடியதுடன் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு குறைந்தது ஒரு மாத கால அவகாசம் தேவை என்றும் அவர்களிடம் தெரிவித்திருந்தேன்.

இதன் அடிப்படையில் இராமநாதபுரம் புதுக்கோட்டை தஞ்சை மற்றும் நாகை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த இந்திய மீனவர் சங்கங்களோடு தொடர்ந்தும் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றேன்.

இதன் தொடர்ச்சியாக எமது கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்காக இந்திய கடற்தொழிலாளர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ள்ார்கள் என்பது மேலும் நம்பிக்கை தரும் விடயமாகும்.

இதேவேளை, இலங்கை - இந்திய அரச தரப்பு பிரதிநிதிகளுக்கிடையிலான கூட்டு செயற்பாட்டுக்குழுவின் அரசமட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 28,29 ஆம் திகதிகளில் புதுடெல்லியில் நடைபெறவுள்ளது. இதில் சுமுகமானதும் வட பகுதி கடற்தொழிலாளர்களின் இடையூறுகளற்ற தொழில் செய்யும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்குமான தீர்மானம் எடுக்கப்படும். இதேவேளை இனி வரும் காலங்களில் எந்த வித தடைகளும் இன்றி எமது கடற்தொழிலாளர்கள் எமது கடல் வளங்களை முழுமையாக அனுபவிக்கும் நிரந்தரமானதொரு சூழல் உருவாகும்.

இதுவரை பொறுமை காத்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கிய வட பகுதி கடற்தொழிலாளர்கள் இம்மாத இறுதியில் நடைபெறவுள்ள இலங்கை இந்திய அரச பிரதிநிதிகளுடனான பேச்சு வார்தையின் பின்னர் உரிய பயனை அடைய முடியும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## லிபியா மீது வான்...

நாடுகளின் நடவடிக்கையில் முதலாவதாக இடம்பெற்ற தாக்குதல் இதுவாகும்.

இராணுவ வாகனமொன்றே இலக்கு வைக்கப்பட்டதாக புர்கார்ட் கூறினார். எனினும் எந்த வகையான வாகனம் என அவர் கூறவில்லை.

விமானப் பறப்பு தடை வலயத்தை அமுல்படுத்துவதில் லிபிய வான் பரப்பில் சுமார் 20 யுத்த விமானங்கள் பறந்துவருவதாக ஏ.எவ்.பி. தெரிவித்துள்ளது.

கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பெங்காஸி நகர் மீது கேணல்கடாபியின் படைகள் தாக்குதல் நடத்துவதை பிரெஞ்சு விமானங்கள் தடுத்து வருவதாக கூறிய பிரெஞ்சு ஜனாதிபதி சார்கோஸி, எந்தவொரு தாக்குதலையும் எமது விமானப்படை எதிர்க்கும் என்றார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் மேற்குலக மற்றும் அரபு நாடுகளின் தலைவர்கள் லிபிய நிலைமை குறித்து கலந்துரையாடி வருகின்ற நிலையில் பிரெஞ்சு விமானங்கள் லிபியாவில் பறக்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. பிரான்ஸின் சென்டீஸியர் விமானப்படைத் தளத்திலிருந்து இவ்விமானங்கள் புறப்பட்டன.

ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தின் பின்னர் லிபியா மீது மேற்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட நேரடி தலையீட்டு நடவடிக்கை இதுவாகும்.

இவ்விமானப் பறப்புகளின் முதல் மணித்தியாலங்களில் பிரச்சினைகள் எதுவும் எதிர்நோக்கப்படவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாரிஸ் மாநாட்டில் கலந்துகொண்ட நெதர்லாந்து பிரதமர் மார்க் ருட்டே, செய்தியாளர்களிடம் பேசுகையில், பிரித்தானிய, பிரெஞ்சு, கனேடிய விமானங்கள் லிபியா மீதான முதல் தாக்குதல்களை ஆரம்பிக்கும் என தான் நம்புவதாக கூறினார்.

கேணல் கடாபியின் படைத்தரப்பினரின் வான் தாக்குதல்களை நிறுத்தும் முகமாக லிபியாவில் விமான பறப்புத் தடை வலயத்தை ஏற்படுத்துவதற்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை ஏற்கனவே அங்கீகரித்திருந்தது.

தனக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்பவர்கள் மீது பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக கேணல் கடாபி அறிவித்த சில மணித்தியாலங்களில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை இத் தீர்மானத்தை அங்கீகரித்திருந்தது.

இந்நிலையில், லிபியா மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் தாக்குதல்களை மேற்கொள்ள தயார்படுத்திய நிலையில், கேணல் கடாபி ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தார்.

ஆயினும், கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழிருக்கும் பெங்ஹாசி நகரில் நேற்று அதிகாலை இரண்டு மணிமுதல் கேணல் கடாபிக்கு ஆதரவான படைத்தரப்பினர் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெங்ஹாசி நகரில் கேணல் கடாபிக்கு ஆதரவான படைத்தரப்பினர் நேற்று இருந்த நிலைகளில் இருந்து 40 கிலோ மீற்றர் தூரம் தாக்குதல்களை மேற்கொண்டு முன்னேறி இருப்பதாக கிளர்ச்சியாளர்களின் தரப்பைச் சேர்ந்த காலித் அஹமட் சர்வதேச ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளதுடன், மேற்கத்தைய நாடுகளில் தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

லிபியாவின் தற்போதைய நிலைமைகள் குறித்து அமெரிக்கா, பிரித்தானியா பிரான்ஸ் மற்றும் அரபு நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று பிரான்ஸில் சந்தித்து ஆலோசனை நடத்தியதாகவும் தெரியவருகின்றது.

பெங்காஸி நகர் மீதான தாக்குதலை கடாபி நிறுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தை நடத்தலாம். கடாபி ஒத்துழைக்காவிட்டால், இராணுவ நடவடிக்கை மூலம் ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்த வேண்டியிருக்கும் என ஒபாமா தெரிவித்துள்ளார்.

எனினும் லிபியா மீதான தாக்குதலில் அமெரிக்கா பங்கு பற்றும். ஆனால் தலைமை வகிக்காது என ஒபாமா கூறியுள்ளார். அமெரிக்காவின் தரைப்படைகள் லிபியாவிற்கு அனுப்பப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஐ.நா. பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தை நியாயப்படுத்த முடியாது என லிபிய தலைவர் கேணல் கடாபி கூறியதாக அல் ஜெஸீரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. இது வெளிப்படையான காலணித்துவவாதம் என கடாபி கூறியுள்ளார்.

படிப்பகம்
நகர சபை, யாழ்ப்பாணம்.



# உள்ளூராட்சி மன்றங்களினூடாகவும் மகிந்த சிந்தனை செயற்திட்டங்கள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் ஊடாக மகிந்த சிந்தனை செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபை தேர்தல்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் நேற்று முன்தினத்துடன் நிறைவு பெற்றுள்ளன.

இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னர் சகல உள்ளூராட்சி சபைகளினதும், முதலாவது அமர்வு இடம்பெறவுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி சபைகளின அதிகாரங்களை பெற்றுக்கொண்ட கட்சிகள், தமது நிர்வாகத்தினை எவ்வாறு மேற்கொள்ளவுள்ளது எனக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த சிந்தனையினை யதார்த்தமாக மாற்ற, உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நடந்து முடிந்த உள்ளூரா ட்சி சபை தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி 9 உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றியது. இந்த நிலையில் தமது சபைகளை ஒழுக்கம் நிறைந்தாக கொண்டு செய்யவுள்ளதாக, கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக குறிப்பிட்டார்.

# ஜப்பான் அணு உலைக் கசிவு கட்டுப்பாட்டுக்குள் வந்தது



(டோக்கியோ)

ஆழிப்பேரலை மற்றும் நில அதிர்வுகளால் பாதிக்கப்பட்ட ஜப்பானுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய பு்.குஷிமா அணு உலையை மீள கட்டியெழுப்புவதற்கு நடடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குளிரூட்டும் கட்டமைப்பை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அணு உலைக்கு மின்சா ரத்தை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட்டுள்ள பெறியியலாளர்கள், அதில் நேற்றிரவு வெற்றி பெற்றுள்ளனர். இதனடிப்படையில் குளிரூட்டும் பணிகள் தற்சயம் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் சர்வதேச அணுசக்தி அதிகார சபையின் தகவலின்படி, பு்.குஷிமா அணு உலை வெப்பத்தின் தாக்கம் தற்போது குறைவடைந்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

# சைப்பிரஸ் நாட்டில் இலங்கையர் ஆர்ப்பாட்டம்

## நீதிமன்ற உத்தரவை மீறியதாக குற்றச்சாட்டு

(சைப்பிரஸ்)

சைப்பிரஸ் நாட்டில் 15 மாத காலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழர் ஒருவரை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி சுமார் 40 இலங்கையர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சண்முகன் உதஜேந்திரன் எனும் இந்நபரை உடனடியாக விடுதலை செய்யுமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும், அவர் சுமார் 15 மாதகாலமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சண்முகனின் குடும்பத்தினர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக இலங்கையிலிருந்து வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர் அவரை விடுதலை செய்யுமாறு கடந்த ஜனவரி 18 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. எனினும், நாட்டின் அதி உயர் நீதிமன்றின் உத்தரவை அதிகாரிகள் நியாயப்படுத்த முடியாத வகையில் மீறியுள்ளதாக சட்டத்தரணி மிசாலிஸ் பராஸ்கேவாஸ் கூறியுள்ளார்.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் பாடசாலைத் தோட்டங்களை ஊக்குவித்தல் சம்பந்தமாகவும், 500 மில்லியன் மரக்கன்றுகளை நடும் தேசிய வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் சம்பந்தமாகவும் கலந்துரையாடுவதற்காக, யாழ்ப்பாண வலயத்தின் சகல பாடசாலை அதிபர்களும் யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நாளை 21 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு சமூகமளிக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

## சுதுமலை அம்பாள் சனசமூக நிலையத்தின்

# கிரிக்கெட் போட்டியும்; பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை தெற்கு அம்பாள் சனசமூக நிலையத்தின் 42ஆம் ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியும், பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு விளையாட்டுக் குழுத் தலைவர் எஸ்.பி.நிருஷன் தலைமையில் மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேசசபையின் ஆனைக்கோட்டை, உபஅலுவலகப் பொறுப்பதிகாரி கு.இரட்ணராஜா, கௌரவ விருந்தினராக வடக்கு மற்றும் கிழக்கு கணினி நிறுவனப் பிராந்திய பணிப்பாளர் பி.ஜெயக்குமார், சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக விளையாட்டு அலுவலர் ரி.லக்ஸ்மன், வலி. தென்மேற்கு சனசமூக நிலைய சமாசத்தின் செயலாளர் என்.வி. சுப்பிரமணியம், அம்பாள் சனசமூக நிலையத்தின் தலைவர் ஆர்.மனோகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய மென்பந்து கிரிக்கெட் இறுதிப் போட்டியில் நவாலி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சுன்னாகம் காந்திஜி நியுஸ்ரன் அணி மோதவுள்ளது. (26)

# விமானப்படையின் முக்கிய இலக்கு...

விமானங்களுக்கே நன்றி தெரிவிக்க வேண்டும்.

ஆனால் இவ் விமானங்களை அழிப்பதற்கு அப்போது இருதரப்பினருக்கும் இடையில் நடைமுறையில் இருந்த போர் நிறுத்தம் தடையாக இருந்தது. 2006ஆம் ஆண்டு ஜுலை மாதம் மாவிலாறில் போர் ஆரம்பமாவதற்கு நீண்டகாலத்துக்கு முன்னரே இவ் விமானங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ் விமானங்களை அழிப்பதற்கான சந்தர்ப்பத்தை நாம் எதிர்பார்த்திருந்தோம்.

புலிகளுக்கு எதிரான எமது மூலோபாயத்தின் ஒரு கட்டமாக விமானத் தாக்குதல்களை எதிர்கொள்வதற்கான ஆற்றலைப் பெற்றோம். இந்தியாவின் உதவியுடன் இலங்கையின் விமானப்படை ஒரு வான்பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்கியதுடன், சில ஆயுதங்களையும், கருவிகளையும் வேறு சில நாடுகளில் இருந்தும் பெற்றோம்.

புலிகளின் விமானங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2008ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் சீனத் தயாரிப்பு ஜெட் போர் விமானங்களைப் கொள்வனவு செய்தோம். இவ் விமானங்களின் உதவியுடன் புலிகளிடம் இருந்த மூன்று வேகம் குறைந்த விமானங்களையும் நாம் அழித்தோம்.

நான்காவது கட்டப்போரில் ஜெட் போர் விமானங்களின் அணியும், எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகள் அணியும் 1,900 இலக்குகள் மீது தாக்குதல் நடத்தின. இத் தாக்குதல்களுக்காக 3,000க்கும் அதிகமான தாக்குதல் பறப்புகளை அவை மேற்கொண்டிருந்தன. இவற்றில் பெரும் பாலானவை வன்னியில் பொதுமக்கள் நிறைந்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களாகும்.

நான்காவது கட்ட ஈழப்போரின் போது இலங்கையின் விமானப்படை ஒரு இலட்சம் பேரை இடம் நகர்த்தியுள்ளதுடன், 10 மில்லியன் கிலோ எடையுள்ள பொருட்களையும் சுமந்து சென்றுள்ளது. காயமுற்ற 21,000 படையினரை மீட்டுள்ளது.

அரசாங்கம் பொதுமக்களைப் புறக்கணித்திருந்தால் புலிகளை எப்போதோ தோற்கடித்திருக்க முடியும். ஆனால் புலிகளும், ஒரு பகுதி ஊடகங்களும் எப்போதும் இலங்கையின் விமானப்படையை இலக்கு வைத்து செய்திகளைப் பரப்பினர்.

கொத்தணிக் குண்டுகளை வீசுவதாகவும், பாடசாலைகள் உள்ளிட்ட பொதுமக்களின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாகவும், பாகிஸ்தானிய விமானப் படையினரைப் பயன்படுத்துவதாகவும் அவர்கள் பரப்புரை செய்தனர்.

ஒரு கட்டத்தில் ஆறு கிபிர் விமானங்களையும், ஐந்து மிக் 27 ரக போர் விமானங்களையும், ஐந்து எவ் 7 ரக போர் விமானங்களையும் செலுத்துவதற்கு 16 விமானப் படையினரே எம்மிடம் இருந்தனர். எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளை செலுத்துவதற்கு 20 விமானப் படையினர் மட்டுமே இருந்தனர். புலிகள் அதிக தூரவீச்சுக் கொண்ட விமான எதிர்ப்பு பீரங்கிகளையும், ஏவுகணைக ளையும் கொண்டிருந்தனர். இவற்றில் சீனாவிடம் கொள்வனவு செய்யப்பட்ட இடம் நகர்த்தக் கூடிய விமான எதிர்ப்புப் பீரங்கிளும், விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் உள்ளடங்கியிருந்தன.

இப் பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகளின் உதவியுடன் புலிகள் சில எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்திகளை படை நடவடிக்கைகளின் போது தாக்கியிருந்த போதிலும், அவற்றில் ஒன்றைக்கூட அவர்களால் வீழ்த்த முடியவில்லை.

ஆயினும், விமானப்படை போர் முடிந்த சில மாதங்களில தென்பகுதியில் பறந்து கொண்டிருந்த போது எம்.ஐ 24 ரக உலங்கு வானூர்தி ஒன்றை இழக்க நேரிட்டது. போர்நிறுத்தம் நடைமுறையில் இருந்த போது புலிகள் எந்தவொரு வடிவிலான எமது வான் கண்காணிப்பையும், ஆளில்லா வேவு விமானங்களின் மூலமான கண்காணிப்பையும் கடுமையாக எதிர்த்தனர். இலங்கை விமானப்படை மூன்று ஆண்டுகளுக்குள் விமான எதிர்ப்பு வலையமைப்பு ஒன்றை உருவாக்கியது.

புலிகளுக்கு எதிரான போரின் போது இலங்கை விமானப்படை மொத்தம் 38 விமானிகளை இழந்தது. அவர்களில் பலர் விமானப் படையின் கட்டளை அதிகாரிகளாக இருந்தவர்கள்.

புலிகளின் முதலாவது விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதலில் 2வது ஸ்குவாட்ரனின் கட்டளை அதிகாரி விங் கொமாண்டர் சிராந்த குணதிலக முதலாவது கொல்லப்பட்டவர்களில் ஒருவர்.

விமானப்படை போர் நடந்த காலங்களில் 25 சதவீதமான விமானிகளை தாக்குதல்களின் போதும், விபத்துகளின் போதும் இழந்து விட்டது. புலிகளுக்கு எதிரான முழுப்போரிலும் இலங்கை விமானப்படை 62 விமானங்களைப் பறிகொடுத்தது.

ஆனால் நன்காவது கட்ட ஈழப்போரில் விமானிகளுக்கும், விமானங்களுக்கும் ஏற்பட்ட இழப்பு குறைவானது. 1995 - 96 காலப்பகுதியில் இலங்கை விமானப்படை ஏ.என் 32 ரக விமானம் உட்பட பல விமானங்களை இழந்தது.

நான்காவது கட்டப்போரில் விமானப்படை மிகமுக்கிய பங்கு வகித்தது. இலங்கை கடற்படையினர் கூட விமானப்படையினரின் உதவிகளைக் கோரினார். இலங்கை விமானப்படையின் நடவடிக்கைகளால் கடற்புலிகள் அதிக அழிவுகளை சந்தித்தனர். ஜெட் போர் விமானங்களின் அணிகளும், எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானூர்தி அணியும் கடற்புலிகளின் 52 படகுகளை தாக்கியழித்ததுடன், அவர்களின் பயிற்சி முகாம்கள் மீது 425 இடங்களில் தாக்குதல்களை நடத்தின. 32 ஆட்டிலறி நிலைகள் தாக்கப்பட்டன.

ஈழப்போரின் நான்காவது கட்டத்தில் மிக் 27 ரக விமானங்களின் அணி விடுதலைப் புலிகளின் 700 இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தியது. புலிகளுடனான போரின் முழுக்காலத்திலும் இலங்கை விமானப்படை 38 விமானிகளையும், 430 அதிகாரிகள் மற்றும் படையினரையும் இழந்துள்ளதுடன், 350 பேர் வரை காயமடைந்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நீண்டதூரம் சென்று தாக்குதல்களில் ஈடுபட்ட ஆழ ஊடுருவித் தாக்கும் இராணுவ அணிகளை இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்திகளே பல முறை மீட்டு வந்தன.

கட்டுநாயக்கவை தளமாக கொண்டு இயங்கும் 12வது ஸ்குவாட்ரனில் மிக் 27 ரகத்தைச் சேர்ந்த ஏழு போர் விமானங்களும், மிக் 23 ரகத்தைச் சேர்ந்த பயிற்சி விமானம் ஒன்றும் உள்ளன. இந்த விமானங்களின் அணி 854 தடவைகள் தாக்குதல்களை மேற்கொண்டன.

நான்காவது கட்டப்போரில் மிக் 27 ரக விமானங்கள் மட்டும் 1071 தொன் எடையுள்ள குண்டுகளை வீசியுள்ளது. விமான ஓடுபாதைகள் மற்றும் பதுங்கு குழிகள் மீது ஆழ ஊடுருவும் குண்டுகள் வீசப்பட்டன. ஓடு பாதைகளை இலக்கு வைப்பதற்கு 1000 கிலோ மீற்றர் வேகத்தில் மிக் 27 ரக விமானங்கள் தரையில் இருந்து 100 மீற்றர் வரை தாழப் பறந்தே குண்டுகளை வீசின. தாழப் பறக்கும் விமானங்களின் மீது குண்டுச் சிதறல்கள் தாக்கி விடாமல் இருப்பதற்காக ஒவ்வொரு குண்டுடனும் பரசூட் இணைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டது.

புலிகளுக்கு எதிரான போரின் போது பாகிஸ்தான், இந்தியா, சீனா, ரஸ்யா, இஸ்ரேல் போன்ற நாடுகளின் உதவிகளை இலங்கை விமானப்படை பெற்றது.

1985ஆம் ஆண்டு இலங்கை விமானப்படை முதல் முறையாக இத்தாலியில் இருந்து குண்டுவீச்சு விமானங்களைக் கொள்வனவு செய்ததுடன், 1993இல் ஆர்ஜென்ரீனாவிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட புக்காரா விமானங்கள் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டன.

ஆனால் புலிகள் வெப்பத்தை நாடிச் சென்று தாக்கும் ஏவுகணைகளைப் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர், 1995இல் இவ் விமானங்களை நாம் கைவிட நேர்ந்தது. இதன்பின்னர் 1996இல் இஸ்ரேலிடம் இருந்து கிபிர் விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. புலிகளுக்கு எதிரான போரில் கிபிர் விமானங்களின் பங்கு அளப்பரியது. கணனி மூலம் குண்டு வீசும் வசதிகளை இக் கிபிர் விமானங்கள் கொண்டிருந்தன.

1991இல் சீனாவிடம் இருந்து இலங்கை விமானப்படை நான்கு எவ் 7 ரக விமானங்களைக் கொள்வனவு செய்ததுடன், 2008இல் மேலும் நான்கு எவ் 7 ரக விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

இவற்றில் பெரும்பாலானவை தற்போது அவ் விமானங்களில் பெரும்பாலானவை வான் இடைமறிப்பு ரேடர்கள் பொருத்தப்பட்ட முக்கிய போர் விமானங்களாக உள்ளன. இவற்றில் நான்கு வெப்ப ஈர்ப்பு ஏவுகணைகளைப் பொருத்தும் வசதிகளைக் கொண்டுள்ளன.

புலிகளின் விமானப்படையை முறியடிக்கவே ஐந்தாவது இலக்க ஜெட் ஸ்குவா்ட்ரன் ஆரம்பிக்கப்பட்டது. இந்த விமான அணி எட்டு எவ் 7 ரக விமானங்களைக் கொண்டுள்ளது. நான்காவது கட்டப் போரில் இவ் விமானனங்கள் 400 தாக்குதல்களை மேற்கொண்டன.

விங் கொமாண்டர் சம்பத் விக்கிரமரத்ன தலைமையிலான ஐந்தாவது இலக்க விமான அணி வவுனியாவில் தாக்குதல் நடத்தி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது வெப்ப ஈர்ப்பு ஏவுகணை மூலம் புலிகளின் முதலாவது விமானத்தை சுட்டு வீழ்த்தியது.

இலங்கை விமானப்படை தற்போது 30,000க்கும் மேற்பட்ட படையினரைக் கொண்ட பலமானதொரு படையாக உள்ளதுடன், அதன் அத்தனை தளங்கள் மற்றும் பிரிவுகளின் பாதுகாப்புக்கும் பொறுப்பாக உள்ளது. ஒன்பதாவது இலக்க விமான அணியில் உள்ள எம்.ஐ 24 ரக தாக்குதல் உலங்கு வானுர்திகள் கூட புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்கு வகித்துள்ளன. நான்காவது கட்ட ஈழப்போரில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 400க்கும் அதிகமான தாக்குதல்களை இந்த உலங்கு வானூர்திகள் மேற்கொண்டன.

படைத்தரப்பினருக்கு மிகவும் நெருக்கமாக உள்ள புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் போது இந்த உலங்கு வானூர்திகள் அதிகம் பயன்பட்டன.

என றொசான் குணதிலக்க இச் செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.